# இத்தா

# சட்டங்களும் ஒழுங்குகளும்

[ தமிழ் – Tamil – تاميلي ]

**Author**

M.S.M. இம்தியாஸ் யூசுப்

2013 - 1434

IslamHouse.com

# العدة نظامها وأحكامها

« باللغة التاميلية »

محمد إمتياز يوسف

2013 - 1434

IslamHouse.com

# இத்தா

# சட்டங்களும் ஒழுங்குகளும்

M.S.M . இம்தியாஸ் யூசுப் ஸலஃபி

உள்ளடக்கம்

அணிந்துரை

முகவுரை

இத்தா என்றால் என்ன?

கணவனின் மரணித்திற்கான இத்தா.

கர்ப்பிணிப் பெண்ணின் இத்தா.

மணம் முடித்து உடலுறவு கொள்ள முன் தலாக் சொல்லப்பட்ட பெண்ணின் இத்தா.

உடலுறவு கொண்ட பின் தலாக் சொல்லப்பட்ட பெண்ணின் இத்தா.

மனைவி தலாக் கேட்டால் அவளுக்குரிய இத்தா.

இஸ்லாத்தை ஏற்ற பெண்ணின் இத்தா.

மாதவிடாய் நின்று போன பெண்ணின் இத்தா.

இத்தாவை எப்போது ஆரம்பிப்பது?

இத்தாவை எங்கிருந்து ஆரம்பிப்பது?

இத்தாவில் குறிப்பிட்ட காலம் காத்திருப்பது ஏன்?

இத்தாவின் ஒழுங்குகளும் உருவாகப்பட்ட மூட நம்பிக் கைகளும்

மதிப்புரை

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மீதும் அவர்களது உற்றார் உறவினர் உத்தம தோழர்கள் அனைவர் மீதும் என்றென்றும் நின்று நிலவட்டுமாக!

இஸ்லாம் பூரண வாழ்க்கைத் திட்டமாகும். அது வாழ்வின் சகலதுறை குறித்தும் விரிவாகப் பேசுகிறது. இஸ்லாத்தை அறியாத முஸ்லிம்கள் சிலர் இஸ்லாத்தின் தூயபோதனைகளில் தூசிவாரி இறைக்கும் விதத்தில் செயல்பட்டு வருகின்றனர்.

இந்த வகையில் புரிந்து கொள்ளப்படாத இஸ்லாமிய சட்டங்களில் இத்தாவும் ஒன்றாகும். சிலர் இத்தாவின் சட்டங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் கடுமையான சட்டங்கள் போட்டு இறுக்கி வைத்துள்ளனர்.

இதனால் இது செயற்படுத்த சாத்தியமற்ற சமாச்சாரம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட முஸ்லிம்கள் 40 நாள் இத்தாவின் பெயரில் எதையோ செய்துவிட்டு இத்தா முடிந்து விட்டது என முடிவு செய்து விடுகின்றனர்.

இது போன்ற தவறுகளிலிருந்து முஸ்லிம் சமூகத்தை மீட்பதென்றால் இத்தா குறித்த பூரண தெளிவை முன் வைப்பது அவசியமாகும். இந்த வகையில் இந்நூல் காலத்தின் தேவையாகவுள்ளது. பெண்கள் இத்தா குறித்த சரியான தெளிவைப் பெற இந்நூல் பெரிதும் உதவும்.

இந்நூலை சத்தியக் குரல் பத்திரிகையின் ஆசிரிய ரும் ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னதில் முஹமமதிய்யா வின் அழைப்பாளருமான MSM இம்தியாஸ் யூசுப் ஸலபி. அவர்கள் தொகுத்துள்ளார்கள்.

தனது எழுத்து மூலமும் பேச்சு மூலமும் சத்தம் சந்தடியில்லாது அமைதியான போக்கில் அழைப்புப் பணியில் ஈடுபட்டு வரும் இவரின் மூன்றாவது நூலாக இது உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

நூலாசிரியரின் இப்பணியைப் பாராட்டுவதுடன் சகல ரும் அவரது எழுத்துப் பணிக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும் என்று அன்புடன் வேண்டிக் கொள்கின் றேன்.

SHM.. இஸ்மாயில் ஸலபி (BA)

பிரதம ஆசிரியர்.

உண்மை உதயம்

# முகவுரை

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே!

இஸ்லாமிய மார்க்கம் மிக இலகுவானது, நடைமுறைக்கு ஏற்றமானது. ஆனாலும் பெரும்பாலான முஸ்லிம்கள் இஸ்லாமிய சட்டதிட்டங்கள் பற்றி சரிவர புரிந்து கொள்ளாமலே நடந்து கொண்டிருக்கிறார்கள். இஸ்லாத் தில் இல்லாததும் இஸ்லாமிய சட்டங்களுக்கு உட்படாத தும் மாற்றமானதுமான விடயங்களை இஸ்லாத்தின் பெயரால் செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கான பிரதான காரணம் முஸ்லிமான ஆணும் பெண்ணும் இஸ்லாத்தின் அடிப்படையான அல் குர்ஆனையும் நபிகளாரின் சுன்னாவையும் விளங்கிக் கொள்ளாததும் அதற்கான முயற்சிகளை மேற் கொள்ளா ததுமாகும். குர்ஆன் சுன்னா அடிப்படையில் இஸ்லாமிய சட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது நடைமுறை யிலுள்ள விடயங்களுக்கும் பாரம்பரியமாக செய்துவரும் காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதனை மார்க்கமாக நினைத்து பின்பற்றி வருவதும் மற்றுமொரு காரணமாகும்.

குர்ஆன் சுன்னாவுக்கு மாற்றமாக தவறாக நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கும் செயற்பாடுகளில் இத்தா என் கின்ற கடமையும் ஒன்றாகும். இத்தா பற்றி முஸ்லிம்

பெண்களுக்கும் ஆண்களுக்கும் போதிய அறிவும் தெளிவும் இல்லை என்பதை அன்றாடம் நாம் பார்த்து வருகிறோம்.

''கணவன் மரணித்தால் நான்கு மாதங்கள் பத்து நாட்கள் மனைவி வெள்ளைப் புடவை அணிந்து யார் கண்ணிலும் படாமல் - சிறுவயது ஆண் பிள்ளையைக் கூட பார்க்காமல்- ஒரு அறையில் ஒதுங்கி இருப்பதும் குறிப்பிட்ட அந்த நாட்கள் முடியும்வரை பெற்ற தகப்பனையும் உடன் பிறந்த சகோதரர்களையும் நேரில் பார்க்காமல் மறைந்து இருப்பதும்தான் இத்தா'' எனக்கூறி சில சடங்குகளை செய்து வருகிறார்கள். இன்னும் சிலர் நாற்பது நாட்கள் மட்டும் வீட்டில் தங்கிவிட்டு வெளியேறி விடுகிறார்கள்.

இத்தாவின் பெயரால் இப்படியான ஒருசெயல் முறையை பரவலாக பார்த்து வருகிறோம். இவர்களது இந்த செயற்பாடுகளை கவணிக்கும் போது இவர்களுக்கு இத்தா என்றால் என்ன என்பது பற்றிய தெளிவு கிடையாது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இத்தாவின் பெயரால் இஸ்லாமிய சட்டங்களை கொச்சைப்படுத்துகிறார்கள். பெண்களை கொடுமைப் படுத்துகிறார்கள். கஷ்டத்திற்கு உள்ளாக்குகிறார்கள் என்பதைத் தவிர வேறெதையும் இவர்கள் செய்ய

வில்லை. இவர்களது இந்த தவறான செயற்பாடுகளுக்கு இஸ்லாமிய சாயம் பூசுவதைத் தான் சகிக்க முடிய வில்லை.

இத்தா என்பது பெண்களோடு சம்பந்தப்பட்ட சட்டம், பெண்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டம். அந்தச் சட்டமே அவர்களுக்கு தெரியாமல் போன தால் தான் அவர்கள் இக்கொடுமையில் அகப்பட்டு இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல கணவனின் மரணத்திற்கு இத்தா உண்டு எனப் புரிந்து கொண்டதுபோல் தலாக்கின் போதும் இத்தா உண்டு என்று புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.

எனவே இத்தா பற்றிய சரியான விளக்கத்தினை அல் குர்ஆன் மற்றும் நபிகளாரின் வழிமுறையின் அடிப் படையில் கொடுக்க வேண்டும் என்பதுடன் அதன் பெயரால் அரங்கேற்றப்பட்டு வருகின்ற தவறான நடை முறைகளையும் சுட்டிக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் இதனை எழுதியுள்ளேன்.

இத்தாவுடைய சட்டத்துடன் தலாக்குடைய சட்டத்தை யும் ஆற்றலையும் அறிவையும் ஆரோக்கியத்தையும் தந்த வல்ல ரஹ்மான் அல்லாஹ்வுக்கே நன்றிகள் உரித் தாகட்டும். இவற்றை சுருக்கமாக இணைத்து விளக்கப் படுத்தி யுள்ளேன் . இதன்மூலம் வாசகர்கள் நன்மை யடைவார்கள் என நம்புகிறேன்.

எல்லாவற்றையும் விட இந்நூலை எழுதுவதற்கு ஆற்ற லையும் அறிவையும் ஆரோக்கியத்தையும் தந்த வல்ல ரஹ்;மான் அல்லாஹ்வுக்கே நன்றிகள் உரித் தாகட்டும்.

## *இத்தா என்றால் என்ன?*

இத்ததுன் عِدَّةَ என்ற அரபு வார்த்தையைத்தான் இத்தா என்று உச்சரிப்பதற்கு இலகுவாக கூறுகிறார்கள்.

இத்தா என்கின்ற அரபு வார்த்தைக்கு கணக்கிடுதல் கணக்குப் பார்த்தல்; எண்ணிப் பார்த்தல் என்பது பொருளாகும்.

ஆங்கிலத்தில் COUNTING பண்ணுதல் எனப்படும். அதாவது 123456...என்று கணக்குப்பார்ப்பதற்கே இத்தா எனப்படும். இந்த அர்த்தத்தில்தான் குர்ஆனிலும் ஹதீஸிலும் இத்தா என்ற வார்த்தை பயன் படுத்தப்பட்டுள்ளது.

**وَمَنْ كَانَ مَرِيضًا أَوْ عَلَى سَفَرٍ فَعِدَّةٌ مِنْ أَيَّامٍ أُخَرَ يُرِيدُ اللَّهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيدُ بِكُمُ الْعُسْرَ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللَّهَ عَلَى مَا هَدَاكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ**

உங்களில் எவர் ( நோன்புபிடிக்க முடியாமல்) நோயாளி யாகவோ அல்லது பயணத்திலோ இருப்பவர் அவர்

(ரமழான் அல்லாத) ஏனைய நாட்களில் (விடுபட்ட நோன்புகளை) கணக்குப் பார்த்து நோன்பு நோற்கட்டும் (2:184,)

அல்லாஹ் உங்களுக்கு எளிதானதையே நாடுகிறான். சிரமமானதை உங்களுக்கு நாடமாட்டான். ( விடுபட்ட நோன்புகளின்) எண்ணிக்கையை முழுமையாக்குவதற்காகவும் உங்களுக்கு நேர்வழியை காட்டியதற்காகவும் நீங்கள் அல்லாஹ்வைப் பெருமைப்படுத்திடவும் ( வேறு நாட்களில் நோன்பு நோற்கும் சலுகை வழங்கப்பட்டது) (2:185).

இந்த வசனங்களில் ரமழானில் விடுபட்ட நோன்புகளை கணக்குப் பார்த்துப் பிடிப்பதை சுட்டிக் காட்டுவதற்கு இத்தா என்ற வார்த்தையை அல்லாஹ் பயன்படுத்தி இருக்கிறான்.

إِنَّ عِدَّةَ الشُّهُورِ عِنْدَ اللَّهِ اثْنَا عَشَرَ شَهْرًا فِي كِتَابِ اللَّهِ يَوْمَ خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ

வானங்களையும் பூமியையும் படைத்த நாள் முதல் அல்லாஹ்வின் பதிவேட்டில் உள்ளபடி மாதங்களின் எண்ணிக்கை அல்லாஹ்விடம் பன்னிரண்டாகும். (9:36)

ஒரு வருடத்திற்கான மாதங்களின் எண்ணிக்கை என்ற வார்த்தையை சுட்டிக் காட்டுவதற்கு இத்தா என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது.

குகை வாசிகளின் சரித்திரத்தைப் பற்றி அல்லாஹ் கூறும் போது

قُلْ رَبِّي أَعْلَمُ بِعِدَّتِهِمْ مَا يَعْلَمُهُمْ إِلاَّ قَلِيلٌ فَلاَ تُمَارِ فِيهِمْ إِلاَّ مِرَاءً ظَاهِرًا وَلاَ تَسْتَفْتِ فِيهِمْ مِنْهُمْ أَحَدًا

(குகையில் தங்கிய)அவர்களின் எண்ணிக்கைப் பற்றி என் இரட்சகனே நன்கு அறிந்தவன் என்று நபியே கூறுவீராக (18:22)

குகையில் எத்தனைபேர் தஞ்சம் புகுந்தார்கள். ஐந்து பேரா? ஆறுபேரா? ஏழுபேரா? எட்டுபேரா? என்ற எண்ணிக்கையை குறித்துக் காட்டுவதற்கு இத்தா என்ற வார்த்தையில் அல்லாஹ் பயன்படுத்து கிறான்.

وَمَا جَعَلْنَا أَصْحَابَ النَّارِ إِلاَّ مَلاَئِكَةً وَمَا جَعَلْنَا عِدَّتَهُمْ إِلاَّ فِتْنَةً لِلَّذِينَ كَفَرُوا

நரகத்தின் காவலர்களாக மலக்குகளையே யன்றி (மற்றெவரையும்) நாம் ஆக்கவில்லை. அவர்களின் எண்ணிக்கையை நிராகரிப்போருக்கு சோதனையாக ஆக்கியுள்ளோம். (74:31)

நரகத்தின் காவலாளிகளாக உள்ள மலக்குகளின் எண்ணி க்கை என்பதை குறித்துக் காட்டுவதற்கு இத்தா என்ற வார்த்தையை அல்லாஹ் பயன்படுத்துகிறான்.

ஆக, இத்தா என்றால் கணக்குப் பார்த்தல் என்பது அதன் நேரடி பொருள் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்

அதுபோல் பரீட்சை எழுதிய மாணவன் அதன் பெறு பேறுகளை ( RESULTS) எதிர்பார்த்து குறிப்பிட்ட நாட்கள் அல்லது மாதங்கள் கடக்கும் வரை காத்திருப்பான்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பை எதிர்பார்ப்பவர் வீஸா வரும் வரை குறிப்பிட்ட நாட்கள் காத்திருப்பார்.

தொழில் புரிபவர் சம்பளம் பெறுவதற்காக மாதத்தின் கடைசி நாட்கள் வரும் வரை காத்திருப்பார்.

இப்படி குறிப்பிட்ட நாட்களை கணக்குப் பார்த்து காத்தி ருப்பதற்கே இத்தா என கூறப்படும்.

எனவே இஸ்லாமிய வழக்கில் கணவனின் மரணத் திற்காக அல்லது தலாக்கிற்காக மனைவி - மறு மணம் முடிக்காமல்- குறிப்பிடப் பட்ட நாட்களின் எண்ணிக்கை முடியும் வரை காத்திருப்பதற்கே இத்தா எனப்படுகிறது.

பல வகைப்படும் இந்த இத்தா பற்றிய விபரங்களை இனி கவனிப்போம்.

## கணவனின் மரணித்திற்கான இத்தா

இஸ்லாம் வருவதற்கு முன் ஜாஹிலியா கால மக்கள்; கணவனை இழந்த பெண்களை இத்தா எனும் பெயரில் ஒரு வருட காலம் முடியும் வரை அவர்களுடனான சகல தொடர்புகளையும் துண்டித்து விட்டு வீட்டிலிருந்து ஒதுக்கி வைப்பார்கள். ஒரு வருடம் முடிந்த பின்பு தான் சேர்த்துக் கொள்வார்கள்.

இது குறித்து அன்னை ஆயிஷா ( ரலி) பின்வருமாரு அறிவிக்கிறார்கள். ''கணவன் மரணித்த பின் மனைவி ஒரு சிறிய குடிசைக்குள் நுழைந்து மோசமான ஆடையை அணிந்து கொள்வாள். ஒரு வருடம் செல்லும் வரை எந்த நறுமணத்தையும் தொடமாட்டாள்.

ஓராண்டு கழிந்தபின் கழுதை அல்லது ஆடு அல்லது ஒரு பறவையை எடுத்து அதன் உடலைத் தனது உடலில் கடுமையாக தேய்த்துக் கொள்வாள். அவ்வாறு அவள் தேய்க்கும் எந்த உயிரினமும் அவளது உடல் அசுத்தத்தின் காரணமாக சாகாமல் இருப்பது மிக அரிதாகும்.

பிறகு அவள் அந்தக் குடிசையிலிருந்து வெளியே வருவாள். அப்போது அவளிடம் ஒட்டகச் சாணம் கொண்டு வரப் படும் . உடனே அவள் அதை தனக்கு முன்னால் எறிந்து விடுவாள். அதுவே அவளது ஒரு

வருடகால இத்தா முடிவடைந்ததற்கான அடையாள மாகும். பிறகு அவள் தான் விரும்பிய நறுமணத்தையோ ஏனையவைகளையோ பழைய படி உபயோகித்துக் கொள்வாள். (புகாரி 5337)

கணவனை இழந்து சோகமான நிலையில் இருக்கும் விதவைப் பெண்கள் குடும்பத்தை விட்டும் தூரப் படுத்தப் பட்டு பிரத்தியேகமான ஆடை அணிவிக்கப்பட்டு தனியான குடிசையினுள் அடைக்கப்பட்டு அசிங்கமாக நடாத்தப் பட்டு வந்த போது அந்த அசிங்கத்திலிருந்தும் கொடுமையிலிருந்தும் பெண்களை காப்பாற்றுவதற்காக ஆரம்ப கட்டமாக சட்டமொன்றை இஸ்லாம் கொண்டு வந்தது.

கணவனை இழந்த பெண்ணை தனியான குடிசையில் ஒதுக்கி தனித்து விட்டு விடாமல் அவளுடனான தொடர் புகளை துண்டித்து விடாமல் கணவனது வீட்டிலேயே தங்க வைத்து பராமரித்து வர வேண்டும். கணவன்; இது குறித்து உறவினர்களுக்கு மரணசாசனம் செய்ய வேண் டும் என்ற சட்டம் பின்வருமாறு அருளப்பட்டது.

وَالَّذِينَ يُتَوَفَّوْنَ مِنْكُمْ وَيَذَرُونَ أَزْوَاجًا وَصِيَّةً لأَزْوَاجِهِمْ مَتَاعًا إِلَى الْحَوْلِ غَيْرَ إِخْرَاجٍ فَإِنْ خَرَجْنَ فَلاَ جُنَاحَ عَلَيْكُمْ فِي مَا فَعَلْنَ فِي أَنْفُسِهِنَّ مِنْ مَعْرُوفٍ وَاللَّهُ عَزِيزٌ حَكِيمٌ

உங்களில் மனைவியரை விட்டு இறக்கும் தருவாயில் இருப்பவர்கள் தங்கள் மனைவியரை ( வீட்டிலிருந்து)

வெளியேற்றி விடாமல் ஓராண்டு வரை பராமரிக்குமாறு (குடும்ப உறவினர்களிடம்) மரண சாசனம் ( வஸீயத்) செய்ய வேண்டும். ஆயினும் தங்கள் விஷயத்தில் நல்ல முடிவை மேற்கொண்டு அவர்களாக ( மனைவியர்கள்) வெளியேறினால் உங்கள் மீது குற்றமில்லை. அல்லாஹ் மிகைத்தவன் ஞானமிக்கவன் (2:240)

இந்த வசனத்தின் மூலம் ஜாஹிலியா காலத்தில் இத்தாவின் பெயரால் நடாத்தப்பட்டு வந்த கொடுமைகள் மற்றும் எல்லா விதமான மூடப்பழக்க வழக்கங்களில் இருந்தும் பெண்கள் விடுவிக்கப்பட்டு கௌரவப்படுத்தப் பட்டு அவர்களது பாதுகாப்பும் பராமரிப்பும் உத்தரவாதப் படுத்தப் பட்டது. அந்த ஒரு வருடகாலத்தில் கணவனின் குடும்பத்தாரின் பராமரிப்பிலிருந்து மனைவி வெளியேறி தன்னுடைய வீட்டாரிடத்தில் சென்றால் எந்த தவறு மில்லை என்றும் சுதந்திரம் வழங்கப்பட்டது.

சிறிது காலத்தின் பிறகு ஒருவருடகால இத்தா" என்ற சட்டமும் மாற்றப்பட்டு கணவன் மரணித்தால் மனைவி நான்கு மாதங்கள் பத்து நாட்கள் கழியும் வரை மறு மணம் செய்யாமல் காத்திருக்க வேண்டும் என்ற இத்தா வின் புதிய சட்டம் அருளப்பட்டது.

وَالَّذِينَ يُتَوَفَّوْنَ مِنْكُمْ وَيَذَرُونَ أَزْوَاجًا يَتَرَبَّصْنَ بِأَنْفُسِهِنَّ أَرْبَعَةَ أَشْهُرٍ وَعَشْرًا فَإِذَا بَلَغْنَ أَجَلَهُنَّ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيمَا فَعَلْنَ فِي أَنْفُسِهِنَّ بِالْمَعْرُوفِ وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ خَبِيرٌ

உங்களில் எவரேனும் மனைவியரை விட்டு மரணித்தால் அந்த மனைவியர் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் (மணம் முடிக்காமல்) காத்திருக்க வேண்டும். அந்தக் காலக் கெடுவை நிறைவு செய்துவிட்டால் அவர்கள் தங்கள் விஷயமாக நல்ல முறையில் முடிவு செய்வதில் உங்கள் மீது எந்தக் குற்றமுமில்லை. நீங்கள் செய்பவை களை அல்லாஹ் நன்கறிந்தவன் (2:234)

அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்ட எந்தப் பெண்ணும் மரணித்த ஒருவருக்காக மூன்று நாட்களுக்கு மேல் துக்கம் கடைப்பிடிப்பதற்கு அனுமதியில்லை. ஆனால் கணவனை இழந்த மனைவிக்கு நான்கு மாதங்கள் பத்து நாட்கள் தவிர என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: உம்மு ஹபீபா (ரலி) நூல் : புகாரி (5339)

இச்சட்டத்தின் மூலம் பெண்ணுக்கு மரியாதையும் கௌரவமும் அளிக்கப்பட்டு மறுமணம் செய்யும் உரிமை யும் அதனை முடிவு செய்யும் அந்தஸ்தும் வழங்கப்பட் டதுடன் அவளது இத்தா காலமும் இலகுவாக்கிக் கொடுக்கப் பட்டது.

## கர்ப்பிணிப் பெண்ணின் இத்தா

கணவன் மரணிக்கும் போது மனைவி கரு உண்டாகிய நிலையில் இருந்தால் கணவன் மரணித்த அந்த

நாளிலிருந்து குழந்தையை பெற்றெடுக்கும் நாள் வரை மனைவி ( இத்தா) காத்திருக்க வேண்டும். அந்த இடைப் பட்ட நாட்கள்தான் இத்தாவுடைய நாட்களாக கணிக்கப் படும். குழந்தையை பெற்றெடுத்தவுடன் இத்தாவின் காலமும் முடிவடைந்து விடும்.

குழந்தையைப் பெற்றெடுக்க ஒன்பது மாதம் அல்லது ஒரு மாதம் அல்லது ஒரு கிழமை அல்லது ஒரு நாள் அல்லது ஒருமணித்தியாலம் அல்லது ஒரு சில வினாடிகள் இருக்கும்போது கணவன் மரணித்தாலும் சுமந்திருக்கும் குழந்தையை அவள் பெற்றெடுக்கும் அந்த நேரம் வரை தான் இத்தாவுடைய நாட்களாக கணிக்கப் படும். எனவே இப்பெண்ணுக்கு 4 மாதங்களும் 10 நாட்களும் என்ற வரையறை கிடையாது.

وَأُولَاتُ الْأَحْمَالِ أَجَلُهُنَّ أَنْ يَضَعْنَ حَمْلَهُنَّ

கர்ப்பிணிப் பெண்களுக்கு (இத்தாவின்) தவணை அவர்கள் (குழந்தையை) பிரசவிக்கும் வரையாகும். ( அல்குர்ஆன் 65:4)

ஸுபைஆ என்ற சஹாபிப்பெண்மணி கர்ப்பிணியாக இருக்கும் போது அவருடைய கணவர் சஹ்த் இப்னு கவ்லா ( ரலி) அவர்கள் மரணித்துவிட்டார்கள். கணவன் இறந்த சிலநாட்களில் குழந்தையை பிரசவித்து

இரவுகள் 23 இரவுகள் 25 இரவுகள் என்றும் தூய் மையடைந்த பிறகு மறுமணத்திற்காக தன்னை அலங் கரித்துக் கொண்டார். அப்போது அபுஸ் ஸனாபில் இப்னு ப்ஃசக் (ரலி) என்பவர் வந்து என்ன இது? உன்னை அலங் கரித்துக் கொண்டிருக்கிறாய். நீ மணம் முடிக்க விரும்பு கிறாயா? அல்லாஹ்வின்மீது சத்தியமாக நான்கு மாதங் களும் பத்து நாட்களும் முடியும்வரை நீ மணம் முடிக்க முடியாது என்றார்.

அப்போது அப்பெண்மணி நபி (ஸல்) அவர்களிடம் வந்து இது விடயமாக விளக்கம் கேட்டார். அதற்கு நபியவர்கள் நீ உனது குழந்தையை பிரசவித்த போதே ( இத்தா முடிவடைந்து) மணம் முடிப்பதற்கு ஆகுமாகி விட்டாய் என தீர்ப்பு வழங்கினார்கள். அறிவிப்பவர்: சுபைஆ (ரலி) அவர்கள் (நூல்: முஸ்லிம் :1484)

இதே கருத்தைக் கொண்ட சில வாசகங்கள் புகாரி (5318) யிலும் பதிவாகியுள்ளது. இன்னும் சில அறிவிப்புக்களில் கணவன் மரணித்து சில இரவுகள் கழிந்த பின் சுபைஆ (ரலி) குழந்தையை பெற்றடுத்ததாகவும் மேலும் சில அறிவிப்புக்களில் அந்த இரவுகளின் எண்ணிக்கை 15 இரவுகள் 20 காணப்படுகிறது. ( நூல்: முஸ்லிம் 1485 நஸயீ 3508-3510)

அப்துல்லாஹ் பின் உத்பா பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் உமர் இப்னு அப்தில்லாஹ் பின் அர்கம் ( ரலி) அவர்களை அஸ்லம் குலத்தைச் சேர்ந்த ஸூபைஆ (ரலி) அவர்களிடம் சென்று அவருக்கு நபி ( ஸல்) அவர் கள் ( கர்ப்பிணிப் பெண்ணின் இத்தா தொடர்பாக) என்ன தீர்ப்பளித்தார்கள் என்று கேட்கும்படி கடிதம் எழுதினேன்.

அப்போது ஸூபைஆ (ரலி) அவர்கள் (பதில் கூறும்போது) நீ குழந்தையை பிரசவித்தவுடன் ( இத்தாவும் முடிவ டைந்து விட்டது) மணம் முடித்துக் கொள் என நபி (ஸல்) அவர்கள் எனக்கு தீர்ப்பு வழங்கினார்கள் என்று கூறினார்கள். (புகாரி-5319)

மிஸ்வர் பின் மக்ரமா (ரலி) அவர்கள் கூறியதாவது:

தம் கணவர் இறந்த சில நாட்களுக்குப் பிறகு ஸூபைஆ (ரலி) அவர்கள் ( குழந்தையை பெற்றெடுத்து) சுத்தம டைந்தார்கள். பிறகு நபி(ஸல்) அவர்களிடம் சென்று (மறு) மணம் முடிக்க அனுமதி கோரினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதி வழங்கினார்கள். அவர் (ஒருவரை) மணந்து கொண்டார். (புகாரி-5320)

கணவன் மரணித்து அவனது உடல் இன்னும் அடக்கம் செய்யப்படாது கட்டிலில் இருக்கும்போது கர்ப்பிணியான

மனைவி குழந்தையை பெற்றெடுத்தால் அப்போது அவளுக்கு இத்தா கிடையாது என உமர் (ரலி) கூறினார்கள். (நூல்: முஅத்தா 1226)

குழந்தை பிறந்த பின் கணவன் மரணித்தால் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் இத்தா- காத்திருக்க வேண்டும்.

### கரு கலைந்த பெண்ணின் இத்தா:

கணவன் மரணிக்கும் போது மனைவி கர்ப்பிணியாக இருந்தால் குழந்தையை பெற்றெடுத்தவுடன் இத்தா முடிவடைகிறது என்பதை மேலே தெளிவு படுத்தினோம். சுமந்திருக்கும் கருவை மையப்படுத்தியே சட்டம் சொல்லப்படுகிறது. அதே கருவை மையப்படுத்தியே கரு கலைந்த பெண்ணுக்குரிய சட்டமும் எடுக்கப்படுகிறது.

எனவே கருதரித்த அப்பெண் இத்தாவில் காத்திருக்கும் போது ஏதோ ஒரு சூழ்நிலையில் ( விபத்து அல்லது தடுக்கி விழுதல் போன்ற காரணங்களினால்;) கரு கலைந்து போயிருந்தால் அத்துடன் அவளுக்குரிய இத்தாவும் முடிவுக்கு வந்து விடும்.

ஆனால் திட்டமிட்ட அடிப்படையில் கருவை கலைப்பதோ அல்லது கருவில் எதுவுமில்லை என்று மறைப்பதோ பெரும் பாவமாகும். கருவரையில் அல்லாஹ்

படைத்திருப்பதை மறைப்பதற்கு அவர்களுக்கு அனுமதி யில்லை" என்ற (2:228) குர்ஆனின் எச்சரிக்கையை கவனத் தில் கொண்டு செயல் பட வேண்டும்.

## மணம் முடித்து உடலுறவு கொள்ளு முன் தலாக் சொல்லப்பட்ட பெண்ணின் இத்தா

தலாக் சொல்லப்பட்ட பெண்கள் இரு வகைப் படுவர்.

1. மணம் முடித்து உடலுறவு கொள்ளு முன் தலாக் சொல்லப்பட்ட பெண்.

2. மணம் முடித்து உடலுறவு கொண்ட பின் தலாக் சொல்லப் பட்ட பெண்.

இவ்விரு சாராருடைய இத்தாவும் வித்தியாசமானதாகும்.

## **மணம் முடித்து உடலுறவு கொள்ளு முன் தலாக் சொல்லப்பட்ட பெண்ணின் இத்தா**

இப்பெண்ணுக்குரிய இத்தா முறை எப்படி? என்பதை கவனிப்பதற்கு முன், இந்த மாதிரியான தலாக் ஏற்படு வதற்குரிய காரணங்கள் என்ன என்பதை இங்கே சுருக்கமாக விளக்குவது பொருத்தமானதாக இருக்கு மென நினைக்கிறேன்.

திருமணங்கள் பிள்ளைகளின் சம்மதத்துடன் நடைபெறுவது முண்டு. சம்மதம் இல்லாமல் நடைபெறுவது முண்டு. இல்லற வாழ்க்கையில் இணைகின்ற இரு உள்ளங்களின் சம்மதத்துடன் திருமணம் நடைபெற வேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளை. அதற்காக காதல் திருமணங்களை இஸ்லாம் ஊக்குவிக்கின்றது என்பது அர்த்தமல்ல. சில பெற்றோர்கள் தங்களது விருப்பத்திற்கேற்ப பிள்ளைகளுக்கு மணமகன் அல்லது மணமகளை தெரிவு செய்து திருமணத்தை நிச்சயம் செய்துவிடுவர். அவர்கள் தெரிவு செய்த மணமகனை அல்லது மணமகளை மணக்கப் போகும் தங்களது பிள்ளைக்கு நேரடியாக காட்டி விருப்பத்தை கேட்கவும் மாட்டார்கள். நான் கீறியகோட்டை என் பிள்ளை தாண்ட மாட்டாது எனக் கூறி பிள்ளைகளுக்கு மணம் முடித்து வைப்பார்கள்.

திருமணம் என்று வருகின்றபோது ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தனக்கு வரக்கூடிய மாப்பிள்ளை அல்லது மணப் பெண் எப்படி இருக்க வேண்டும், என்ன அமைப் பில் இருக்க வேண்டும் என்ற ஒரு வர்ணனையை அல்லது சித்திரத்தை தங்களது உள்ளத்தில் வரைந்தி ருப்பார்கள். கடற்கரை ஓரத்தில் நின்று நிலாவை பார்த்து ரசிப்பது போல் தங்களது மனக்கோட்டைக்குள் கட்டி வைத்துள்ள எதிர்கால வாழ்வின் இலட்சியங்களை தனி

மையில் இருந்து ரசித்து கொண்டிருப்பார்கள். அமையப் போகும் வாழ்வின் வசந்தங்களை எண்ணி கனவு காண்பார்கள். அந்த கனவிலும் எதிர்பார்ப்பிலும் தனி யான சுகத்தை காண்பார்கள்.

திருமணம் நிச்சயிக்கப்படும் போது மணமுடிக்கும் இரு வரும் ஒருவருக்கொருவர் நேரடியாகப் பார்த்துக் கொள்ளும் வாய்ப்பை பெற்றோர்களது முன்னிலையில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கணவன் மனைவியாக அமையப்போகும் இரு உள்ளங்களும் நேருக்கு நேராகப் பார்த்துக் கொள்ளும்போது அவர்கள் அது வரை கண்ட கனவுகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் விடை கிடைக்கும். இருவரும் சம்மதம் தெரிவித்தால் அத்திருமணத்தை நடாத்தி வைக்க வேண்டும். சம்மதம் இல்லை என்றால் நிறுத்தி வைக்க வேண்டும்.

சில பெற்றோர்; திருமணம் பேசும் போது வாழ்க்கைத் துணையாக அமையப் போகும் மணமகனை அல்லது மணமகளை நேரடியாக பார்த்துக் கொள்ள தங்களது பிள்ளைக்கு அனுமதிக்க மாட்டார்கள். காரணம் கேட்டால் அப்படிப் பார்ப்பது கூடாது, ஹராம் என்று கூறுவார்கள்.

இன்னும் சில பெற்றோர்; நேரடியாகப் பார்த்துக்கொள்ள அனுமதிக்காமல் ( போட்டோ) புகைப்படங்களை காட்டி அனுமதி கேட்பார்கள். அல்லது முடித்துவைப்பார்கள்.

இதன் மூலம் பிள்ளைகளது எதிர்பார்ப்புக்களை வீணடிப்பதோடு அவர்களது வாழ்க்கையையும் சிதைத்து விடுகிறார்கள்.

போட்டோவிலுள்ள அழகைப்பார்த்து மணமுடித்த பின் முதலிரவில் நேரடியாக நிஜமுகத்தை பார்க்கும் போதே பிரச்சனை ஆரம்பிக்கிறது. கமராவுக்கு முன்னால் நிற்கும் போது முகத்தை அழகுபடுத்தி அதற்கான மேக்கப் சாதனங்களைப் பயன்படுத்தி முகத்திலுள்ள குறைகளை மறைத்து விட்டுத்தான் போட்டோ எடுக்கிறார்கள். இயற் கையாக உள்ள முகத்தோற்றத்தை மறைத்துவிட்டு செயற்கையாக ( அழகிய வடிவில்) போலி முகத் தோற்றத்தை ஏற்படுத்து கிறார்கள். உடல் அங்கங்களின் குறைகளையும் மறைத்து விடுகிறார்கள். வயது கூடிய தோற்றத்தை மறைத்து வயது குறைந்த தோற்றத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள்.

போட்டோவின் போலித்தனம் களையப் பட்டு சுய ரூபத்தை முதலிரவில் காணும் போதே வாழ்க்கை கசங்கிப் போகிறது. தலாக் வந்து நிற்கிறது.

நேருக்கு நேராக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளும் போது ஏமாற்றத்துக்கு வழியில்லாமல் போய்விடும். அங்கங்களில் அல்லது தோற்றங்களில் குறைகள் இருந் தாலும் நெட்டை குட்டை என்ற குறைகள் இருந்தாலும்

அல்லது வேறு ஏதாவது குறைகள் இருந்தாலும் தெரிந்து விடும். இப்படி செய்வதன் மூலம் திருமணத்திற்குப் பின்னால் வரக் கூடிய பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுவதுடன் பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்களும் புரிந்து விடும்;.

எந்தப் பெற்றோரும் தங்களது பிள்ளைகளின் வாழ்வு தலாக்கில் முடிவதை விரும்புவதில்லை. ஆனாலும் தலாக் ஏற்படுவதற்கு ( சில நேரம் ) அவர்களும் காரணமாகி விடுகின்றனர். பிள்ளைகளின் சம்மதம் இல்லாமல் மணம் முடித்து வைப்பதும், திருமணத்திற்கு முன்னால் மாப்பிள்ளையை அல்லது மணப் பெண்ணை நேருக்கு நேர் காட்டாமல் - சம்மதம் பெறாமல்- மணம் முடித்து வைப்பதும் தலாக்கிற்குக் காரணமாகி விடுகிறது. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் எதிர் பார்த்திருந்த எதிர்பார்ப்புகளுக்கு மாற்றமாக கணவன் அல்லது மனைவி அமைந்திருந்ததை காணும் போது அவர்களது வாழ்வில் புயல்வீசத் தொடங்குகிறது. அதன் முடிவுதான் விவாகரத்து.

மணமுடிக்கப் போகும் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் நேரடியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் சம்மதம் பெற வேண்டும் என்ற நபிகளாரின் கட்டளை உதாசீனப்படுத்தப் பட்டதால் இந்நிலை உருவாகிறது.

திருமணம் பேசும் போது இஸ்லாம் தடுத்திருக்கின்ற சீதனம் பற்றியும் முடிவு செய்வார்கள். திருமண நாள் அல்லது அன்றைய முதலிரவில் அந்த சீதனம் அத னோடு தொடர்பான பத்திரங்கள் மாப்பிள்ளை வீட்டாரி டம்; கையளிக்க வேண்டும். இல்லையேல் மாப்பிள்ளை வரமாட்டார். அந்த நிமிடமே பிரிவு ஏற்பட்டு விடும்.

அல்லது திருமண நாளன்று கணவனைப் பற்றியோ மனைவியை பற்றியோ அல்லது அவர்களது குடும் பத்தைப் பற்றியோ தப்பான தவறான செய்திகள் கேள் விப்பட்டு நிரூபிக்கப்பட்டால்; அந்தநேரத்தில் பிரச்சனை கள் ஏற்படுவதுண்டு. இதுமாதிரியான நேரங்களில் விவாகரத்து முதலிரவில் கூட நடைபெறும்.

அல்லது வெறுப்பு மற்றும் இணக்கமில்லாத காரணங் களால் சில நாட்கள் அல்லது சில மாதங்கள், வருடங்கள் கடந்த பின்பும் கூட விவாகரத்து நடைபெறும். ரெஜிஸ்டார் பதிவில் மட்டும் தான் கணவன் மனைவி என்ற உரிமை இருக்குமே தவிர வாழ்வில் உறவு இருக்காது. வெளித்தோற்றத்தில் கணவன் மனைவியாக காட்சி யளிப்பார்கள். ஆனால் உள்ளுக்குள்ளே பிரிந்து நின்று வாழ்வார்கள். இன்னும் சொல்லப் போனால் இரண்டு பேரும் சேர்ந்து இணைந்திருக்கவும் மாட்டார் கள் ( உடல் உறவு கொண்டிருக்கவும் மாட்டார்கள்.) இணைய விடவும் மாட்டார்கள்.

பலபேருடைய திருமண வாழ்வு அஸ்தமனமாகுவதற்கு மேலே சொன்ன விடயங்களும் வேறு சில விடயங் களும் காரணமாகி விடுகின்றன.

இந்நிலையில் கணவன் மனைவியை விவாகரத்து செய்தால் அதாவது கணவன் மனைவிக் கிடையில் உடலுறவு கொள்ளாத நிலையில் விவாகரத்து ( தலாக்) நடந்தால் மனைவிக்கு இத்தா என்பது கிடையவே கிடையாது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِذَا نَكَحْتُمُ الْمُؤْمِنَاتِ ثُمَّ طَلَّقْتُمُوهُنَّ مِنْ قَبْلِ أَنْ تَمَسُّوهُنَّ فَمَا لَكُمْ عَلَيْهِنَّ مِنْ عِدَّةٍ تَعْتَدُّونَهَا فَمَتِّعُوهُنَّ وَسَرِّحُوهُنَّ سَرَاحًا جَمِيلاً

விசுவாசிகளே! நீங்கள் விசுவாசம் கொண்ட பெண்களை மணந்து அவர்களைத் தீண்டுவதற்கு ( உடலுறவு கொள் வதற்கு) முன் தலாக் சொல்லிவிட்டால் உங்களுக்காக அவர்கள் மீது (காத்திருக்கும்) இத்தா ஏதுமில்லை. (33:49)

## உடலுறவு கொண்ட பின் தலாக் சொல்லப்பட்ட பெண்ணின் இத்தா

திருமணம் முடித்து உடலுறவும் கொண்டு இல்லற வாழ்வில் இணைந்திருக்கும் போது கணவன் மனைவியை தலாக் சொல்லி விட்டால் அவளுடைய இத்தா காலம் மூன்று மாதவிடாய்கள் வந்து அதி லிருந்து சுத்தமடையும் வரையுள்ள நாட்களாகும்.

وَالْمُطَلَّقَاتُ يَتَرَبَّصْنَ بِأَنْفُسِهِنَّ ثَلاَثَةَ قُرُوءٍ وَلاَ يَحِلُّ لَهُنَّ أَنْ يَكْتُمْنَ مَا خَلَقَ اللَّهُ فِي أَرْحَامِهِنَّ إِنْ كُنَّ يُؤْمِنَّ بِاللهِ وَالْيَوْمِ الآخِرِ وَبُعُولَتُهُنَّ أَحَقُّ بِرَدِّهِنَّ فِي ذَلِكَ إِنْ أَرَادُوا إِصْلاَحًا وَلَهُنَّ مِثْلُ الَّذِي عَلَيْهِنَّ بِالْمَعْرُوفِ وَلِلرِّجَالِ عَلَيْهِنَّ دَرَجَةٌ وَاللهُ عَزِيزٌ حَكِيمٌ

(தலாக்) விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்கள் மூன்று மாத விடாய்கள் முடியும் வரை (மறுமணம் செய்யாமல்) காத்திருக்க வேண்டும். அல்லாஹ்வையும் இறுதி நாளையும் அவர்கள் நம்பினால் தமது கருவரை களில் அல்லாஹ் படைத்திருப்பதை மறைப்பதற்கு அவர் களுக்கு அனுமதி இல்லை. இருவரும் நல்லிணக்கத்தை விரும்பினால் அவர்களின் கணவர்கள் அவர்களைத் திரும்பச் சேர்த்துக் கொள்ளும் உரிமை படைத்தவர்கள்.

பெண்களுக்கு கடமைகள் இருப்பது போல் அவர்களுக்கு உரிமைகளும் சிறந்த முறையில் உள்ளன. அவர்களை விட ஆண்களுக்கு ஓர் உயர்வு உண்டு. அல்லாஹ் மிகைத்தவன் ஞானமிக்கவன். (2:228)

இந்த மூன்று மாதவிடாய்களுக்குரிய காலங்கள்; சில நேரம் நீண்ட தாகவும் இருக்கலாம் குறைவாகவும் இருக் கலாம். ஒரு பெண்ணுடைய உடலமைப்பை பொருத்து இது அமையும். எனவே இங்கே குறிப்பிட்ட நாட்களை யோ அல்லது மாதங்களையோ கணக்கில் எடுக்கப்படு வதில்லை. மாறாக அப்பெண்ணின் மூன்று மாதவிடாய் கள் அதிலிருந்து தூய்மையடையும் காலங்களைத் தான் இத்தாவுடைய நாட்களாக கணக்கில் எடுக்கப்படுகிறது.

இவ்வாறு மூன்று மாதவிடாய்களிலிருந்து தூய்மைய டையும் கால எல்லையில் காத்திருக்கும்போது -கணவன் தனது மனைவியுடன் சேர்ந்து வாழவேண்டும் என்று நல்லிணக்கத்தை விரும்பினால், மனைவியும் அதற்கு சம்மதித்தால் - அந்த மூன்று மாதவிடாய்கள் முடிவடை வதற்கு முன்பு இருவரும் சேர்ந்து வாழலாம்.

மூன்று மாதவிடாய்களின் காலஎல்லைகளை பூரணப் படுத்த வேண்டும் என்றோ இத்தாவின் நாட்கள் முடிவ டைய வேண்டு மென்றோ அல்லது அப்படி செய்யக் கூடாது என்றோ இஸ்லாத்தில் எந்தத் தடையுமில்லை . சேர்ந்து வாழ நினைக்கும் போது மனைவி ( அல்லது மற்றவர்கள்) இத்தாவைப் பற்றி கவலைப்பட வேண்டிய தில்லை. சந்தோசமாக சேர்ந்து வாழ வேண்டியதுதான் . இதனையே மேலேயுள்ள வசனமும் பின்வரும் வசனமும் சுட்டிக்காட்டுகிறது. இச்சட்டத்திற்கு"தலாக் ரஜ்யீ" எனகூறப்படும்.

وَإِذَا طَلَّقْتُمُ النِّسَاءَ فَبَلَغْنَ أَجَلَهُنَّ فَأَمْسِكُوهُنَّ بِمَعْرُوفٍ أَوْ سَرِّحُوهُنَّ بِمَعْرُوفٍ وَلَا تُمْسِكُوهُنَّ ضِرَارًا لِتَعْتَدُوا وَمَنْ يَفْعَلْ ذَلِكَ فَقَدْ ظَلَمَ نَفْسَهُ وَلَا تَتَّخِذُوا آيَاتِ اللَّهِ هُزُوًا وَاذْكُرُوا نِعْمَةَ اللَّهِ عَلَيْكُمْ وَمَا أَنْزَلَ عَلَيْكُمْ مِنَ الْكِتَابِ وَالْحِكْمَةِ يَعِظُكُمْ بِهِ وَاتَّقُوا اللَّهَ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

நீங்கள் ( உங்கள்) மனைவியருக்கு மணவிலக்கு ( தலாக்) அளித்து விட்டால் அவர்கள் தமது (இத்தா) தவணையின் இறுதியை அடைவதற்குள் அவர்களை முறைப்படி

(மனைவியாகச்) சேர்த்துக் கொள்ளுங்கள் அல்லது நல்ல முறையில் அவர்களை விடுவித்துவிடுங்கள்.

அவர்களைத் துன்புறுத்தி வரம்பு மீறி நடப்பதற்காக அவர்களை தடுத்து வைக்காதீர்கள். அவ்வாறு செய்பவர் தமக்குத் தாமே அநீதி யிழைத்து விட்டார். அல்லாஹ் வின் வசனங்களைப் பரிகாசமாக எடுத்துக் கொள்ளாதீர் கள். அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ள அருட் கொடையையும் அவன் உங்களுக்கு அறிவுரை வழங்குவதற்காக அருளியுள்ள வேதத்தையும் ஞானத் தையும் எண்ணிப்பாருங்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள். அல்லாஹ் அனைத்துப் பொருட்களையும் மிக்க அறிந்த வன் என்பதை புரிந்து கொள்ளுங்கள். (2:231)

மனைவி மூன்று மாதவிடாய்களிலிருந்து சுத்தமடை வதற்காக காத்திருக்கும் அக்கால எல்லைக்குள் சேர்ந்து வாழ இணங்கா விட்டால் மாதவிடாய்களிலிருந்து மனைவியும் சுத்தமடைந்து விட்டால் அவர்களுக் கிடையே இருந்த கணவன் மனைவி என்ற உறவு அறுந்து விடுகிறது.

அதன்பின் இருவரும் மீண்டும் சேர்ந்து வாழ வேண்டும் என்று விரும்பினால் அவர்கள் புதிதாக திருமணம் செய்து கொள்ள வேண்டும். அதாவது முறையாக

சாட்சி(வலி)களை வைத்து மஹரை நிர்ணயித்து மண முடித்துக்கொள்ள வேண்டும்.

மணமுடித்து வாழ்ந்து கொண்டிருக்கும் போது மறு படியும் இருவருக்கிடையில் பிரச்சனைகள் ஏற்பட்டு கண வன் மனைவியை தலாக் சொன்னால் மனைவி மூன்று மாதவிடாய்களிலிருந்து தூய்மையடையும் காலம்வரை (இத்தா) காத்திருக்க வேண்டும். அக்கால எல்லைக்குள் மீண்டும் சேர்ந்து வாழவிரும்பினால் வாழலாம். இல்லை யேல் மனைவி சுத்தமடைந்த பின் பிரிந்துசெல்லலாம்.

மறுபடியும்- இரண்டாவது முறையாக சேர்ந்து வாழ வேண்டும் என்று இருவரும் விரும்பினால் சாட்சிகளை வைத்து மணம்முடித்து கொள்ளலாம்.

وَإِذَا طَلَّقْتُمُ النِّسَاءَ فَبَلَغْنَ أَجَلَهُنَّ فَلَا تَعْضُلُوهُنَّ أَنْ يَنْكِحْنَ أَزْوَاجَهُنَّ إِذَا تَرَاضَوْا بَيْنَهُمْ بِالْمَعْرُوفِ ذَلِكَ يُوعَظُ بِهِ مَنْ كَانَ مِنْكُمْ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآَخِرِ ذَلِكُمْ أَزْكَى لَكُمْ وَأَطْهَرُ وَاللَّهُ يَعْلَمُ وَأَنْتُمْ لَا تَعْلَمُونَ

நீங்கள் (உங்கள்) மனைவியருக்கு மணவிலக்கு அளித்து தமது ( இத்தா)தவணையை நிறைவு செய்து விட்டால் அவர்கள் ( தலாக் சொல்லப்பட்ட) தம் கணவர்களை (மீண்டும்) முறையோடும் மனம் விரும்பியும் மணந்து கொள்வதைத் தடுக்காதீர்கள்.

உங்களில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டோருக்கு இவ்வாறு அறிவுறை

கூறப்படுகிறது. இதுவே உங்களுக்கு நேர்மையானதும் தூய்மையானதும் ஆகும். அல்லாஹ் அறிகிறான் நீங்கள் அறிய மாட்டீர்கள்."(2:232)

கணவன் மனைவியை தலாக் கூறி பிறகு சேர்ந்து கொள்வதற்கு ( மணம் முடிப்பதற்கு) இரண்டு சந்தர்ப்பங் கள் வழங்கப்பட்டுள்ளன.

الطَّلَاقُ مَرَّتَانِ فَإِمْسَاكٌ بِمَعْرُوفٍ أَوْ تَسْرِيحٌ بِإِحْسَانٍ

இவ்வாறு (மனைவியை தலாக் கூறி திரும்ப அழைத்துக் கொள்ள உரிமையுள்ள) தலாக் இரண்டு தடவை களா கும். பின்னர் முறைப்படி சேர்ந்து வாழலாம் அல்லது நல்ல முறையில் (அவளை) விடுவித்து விடலாம். (2:229)

இவ்விரண்டு சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திய பின் மூன்றாவது முறையும் கணவன் மனைவியை தலாக் சொன்னால் அவர்கள் இருவரும் மறுமணம் செய்து கொள்ள முடியாது.

மனைவி மூன்று மாதவிடாய்களிலிருந்து தூய்மைய டைந்த பிறகு வேறொருவரை மணம் முடித்து அந்தக் கணவரும் இவளை தலாக் சொன்னால் - அதற்கான இத்தாவும் முடிந்த பின்பு- தான் முன்னைய கணவருக்கு இம்மனைவியை மீண்டும் மணக்க முடியும்.

فَإِنْ طَلَّقَهَا فَلَا تَحِلُّ لَهُ مِنْ بَعْدُ حَتَّى تَنْكِحَ زَوْجًا غَيْرَهُ فَإِنْ طَلَّقَهَا فَلَا جُنَاحَ عَلَيْهِمَا أَنْ يَتَرَاجَعَا إِنْ ظَنَّا أَنْ يُقِيمَا حُدُودَ اللَّهِ وَتِلْكَ حُدُودُ اللَّهِ يُبَيِّنُهَا لِقَوْمٍ يَعْلَمُونَ

பின்னர் அவன் ( மூன்றாவது முறையாக) அவளுக்கு (தலாக்) மணவிலக்கு அளித்து விட்டால் பிறகு அவள் அவனல்லாத வேறொரு கணவரை மணக்காத வரை அவள் அவனுக்கு அனுமதிக்கப் பட்டவளாக ஆக மாட்டாள்.

அ(க்கண)வனும் இவளுக்கு மணவிலக்கு அளித்து அந்த(ப் பெண்ணும் முதல் கணவனுமாகிய) இருவரும் அல்லாஹ்வின் வரம்புகளை நிலை நாட்டுவோம் என்று கருதினால் அவ்விருவரும் ( திருமணத்தின் மூலம்) சேர்ந்து கொள்வது அவர்கள்மீது குற்றமாகாது.

இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். அறிந்து கொள் ளும் மக்களுக்காக இவற்றை அவன் தெளிவு படுத்து கின்றான்.'' (2:230)

குர்ஆனின் இச்சட்டம் தெரியாத பெரும்பாலான முஸ்லிம்கள் தங்களது குடும்பவாழ்வை சீர்குலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கணவன் மனைவியைப் பார்த்து உன்னை தலாக் சொல்லி விட்டேன் தலாக்! தலாக்! தலாக்! என்று ஒரே தடவையில் மூன்று முறை சொன்னாலும் சரி முப்பது தடவைகள் சொன்னாலும் சரி. அது ஒரு தடவை சொல்லப்பட்ட தலாக்காக கணிக்கப்படுமே தவிர முத்த லாக்காக கணிக்கப்படமாட்டாது.

தலாக்கிற்கான இரண்டு சந்தர்ப்பங்கள் வழங்கப் பட்டுள்ளன அதனை வாபஸ் பெற்று (தலாக் ரஜ்யீ) மறு படியும் சேர்ந்து வாழலாம் என்ற வசனத்தின் மூலமும் ஸஹீஹுல் முஸ்லிம், நஸயி போன்ற கிரந்தங்களில் பதிவாகியுள்ள ஹதீஸ்களில் மூலமும் இந்த உண்மையை புரிந்து கொள்ளமுடிகிறது. ( மேலதிக விபரங்களுக்கு தலாக் பற்றிய எமது நூலில் எதிர் பாருங்கள் இன்ஷா அல்லாஹ்).

கணவன் மனைவிக்கு தலாக் அளித்திடும்போது மனைவி மாத விடாய்காரியாக இருக்கக்கூடாது அதிலிருந்து சுத்த மடைந்த நிலையில் இருக்கவேண்டும் என்பது முக்கிய நிபந்தனையாகும். (நூல்: முஸ்லிம் 2931)

கணவன் தலாக் வழங்கிய பின் மனைவிக்கு கொடுத்த மஹர் உட்பட எந்த வொன்றையும் மனைவியிடமிருந்து திருப்பி கேட்க முடியாது.

وَلاَ يَحِلُّ لَكُمْ أَنْ تَأْخُذُوا مِمَّا آتَيْتُمُوهُنَّ شَيْئًا

மனைவியருக்கு நீங்கள் கொடுத்தவற்றிலிருந்து எந்த ஒன்றையும் திரும்பப் பெறுவதற்கு உங்களுக்கு அனு மதியில்லை. (2:229)

وَآتَيْتُمْ إِحْدَاهُنَّ قِنْطَارًا فَلاَ تَأْخُذُوا مِنْهُ شَيْئًا

விசுவாசிகளே! பெண்களை வலுகட்டாயமாக ( மனைவி களாக) அடைவது உங்களுக்கு அனுமதி யில்லை. எதையும் பிடுங்கிக் கொள்வதற்காக அவர்களைத் துன்புறுத்தாதீர்கள். அவர்கள் வெளிப்படையான மானக் கேடான காரியத்தை செய்தாலே தவிர. அவர்களுடன் நல்ல முறையில் குடும்பம் நடத்துங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தால் நீங்கள் வெறுக்கும் ஒன்றில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை அமைத்திருப்பான்.

ஒருமனைவிக்குப் பதிலாக ( விவாகரத்து செய்து) மற்றொரு பெண்ணை மணந்து கொள்ள விரும்பினால் முன்னைய மனைவிக்கு ஒரு குவியலையே கொடுத்தி ருந்தாலும் அதில் எதையும் பிடுங்கிக் கொள்ளாதீர்கள். (4:19.20)

## மனைவி தலாக் கேட்டால் அவளுக்குரிய இத்தா

கணவனுக்கு மனைவியை தலாக் சொல்லி பிரிந்து செல்வதற்கு உரிமை கொடுக்கப் பட்டுள்ளது போலவே மனைவிக்கும் தலாக் கேட்கும் உரிமை கொடுக்கப் பட்டுள்ளது.

மனைவிக்கு கணவனைப் பிடிக்காவிட்டால் கணவனுடன் சேர்ந்து வாழமுடியாது என்ற நியாயமான காரணங்கள் இருக்குமாக இருந்தால் மனைவி கணவனிடமிருந்து

தலாக் பெற்று சட்டபூர்வமாக பிரிந்து செல்லலாம். இதனையே "குல்உ" எனகூறப்படும்.

إلا أَنْ يَخَافَا أَلَّا يُقِيمَا حُدُودَ اللَّهِ فَإِنْ خِفْتُمْ أَلا يُقِيمَا حُدُودَ اللَّهِ فَلاَ جُنَاحَ عَلَيْهِمَا فِيمَا افْتَدَتْ بِهِ تِلْكَ حُدُودُ اللَّهِ فَلا تَعْتَدُوهَا وَمَنْ يَتَعَدَّ حُدُودَ اللَّهِ فَأُولَئِكَ هُمُ الظَّالِمُونَ

(கணவன் மனைவியாகிய) அவ்விருவரும் ( சேர்ந்து வாழும்போது) அல்லாஹ்வின் வரம்புகளை நிலைநாட்ட மாட்டார்கள் என்று நீங்கள் அஞ்சினால் (மனைவியாகிய) அவள் எதையேனும் ஈடாகக் கொடுத்து பிரிந்து விடுவது இருவர் மீதும் குற்றமில்லை. இவை அல்லாஹ்வின் வரம்புகள். எனவே அல்லாஹ்வின் வரம்புகளை மீறா தீர்கள். அல்லாஹ்வின் வரம்புகளை மீறுவோரே அநீதி இழைத்த வர்கள் (2:229)

ஸாபித் பின் கைஸ் ( ரழி) அவர்களின் மனைவி நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! (என் கணவர்) ஸாபித் பின் கைஸின் குணத்தையோ மார்க்கப் பற்றையோ நான் குறை கூறவில்லை. ஆனால் நான் இஸ்லாத்தில் இருந்து கொண்டே ( கணவனுக்கு மாறு செய்யும்) நிராகரிப்பை அஞ்சுகிறேன் என்று கூறினார். அப்போது நபி(ஸல்) அவர்கள் ஸாபித் உனக்கு ( மணக் கொடையாக) அளித்த தோட்டத்தை அவருக்கு நீ திருப் பிக்கொடுத்து விடுகிறாயா? என்று கேட்டார்கள். அப்பெண் ஆம் என்று கூறினார்.(மனைவியிடமிருந்து) தோட்டத்தை

ஏற்றுக் கொண்டு அவளை தலாக் சொல்லி விடு என ஸாபித் பின் கைஸிடம் நபி அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரழி) நூல்: புகாரி (5273)

மனைவி கணவனிடமிருந்து பிரிந்து சென்ற பிறகு ஒரு மாதவிடாயிலிருந்து தூய்மையடையும் வரை ( இத்தா) காத்திருக்க வேண்டும்.

தலாக் கோரிய அப்பெண்ணுக்கு ஒரு மாதவிடாய் காலம் முடியும் வரை இத்தாவை கணக்கிலெடுக்குமாறு நபியவர்கள் கூறியதாக திர்மிதியில் ( 1185) நஸயீ ( 3440) பதிவாகியுள்ளது.

எனவே மனைவி ஒரு மாதவிடாயிலிருந்து சுத்தமடையும் வரை காத்திருக்கும் நாட்களே அவளுக் குரிய இத்தாவுடைய காலமாகும்.

## இஸ்லாத்தை ஏற்ற பெண்ணின் இத்தா

முஸ்லிமான ஒரு ஆண் முஸ்லிமான ஒரு பெண்ணை யும் முஸ்லிமான ஒருபெண் முஸ்லிமான ஒரு ஆணை யும் மண முடிப்பதை இஸ்லாம் அனுமதிக்கிறது. அதே வேளை முஸ்லிமான ஆணோ பெண்ணோ முஸ்லிம் அல்லாதவரை மணமுடிப்பதை தடைவிதிக்கிறது.

ஒரே ஒரு கடவுளை ஏற்றுக் கொண்டவரும் ஏற்றுக் கொள்ளாதவரும்- இஸ்லாத்திற்கு வந்தவரும் வராத வரும்- சமமாக மாட்டார்கள் என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

وَلا تَنْكِحُوا الْمُشْرِكَاتِ حَتَّى يُؤْمِنَّ وَلَأَمَةٌ مُؤْمِنَةٌ خَيْرٌ مِنْ مُشْرِكَةٍ وَلَوْ أَعْجَبَتْكُمْ وَلا تُنْكِحُوا الْمُشْرِكِينَ حَتَّى يُؤْمِنُوا وَلَعَبْدٌ مُؤْمِنٌ خَيْرٌ مِنْ مُشْرِكٍ وَلَوْ أَعْجَبَكُمْ أُولَئِكَ يَدْعُونَ إِلَى النَّارِ وَاللَّهُ يَدْعُو إِلَى الْجَنَّةِ وَالْمَغْفِرَةِ بِإِذْنِهِ وَيُبَيِّنُ آيَاتِهِ لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَذَكَّرُونَ

(அல்லாஹ்வுக்கு) இணைவைக்கும் பெண்களை அவர்கள் இறை விசுவாசம் கொள்ளும்வரை நீங்கள் ( ஆண்கள்) திருமணம் செய்து கொள்ளாதீர்கள். இணைவைக்கும் பெண் உங்களைக் கவரக் கூடியவளாக இருந்தபோதிலும் அவளைவிட இறை விசுவாசமுள்ள அடிமைப் பெண்ணே நிச்சயமாக மேலானவள் ஆவாள்.

இணைவைக்கும் ஆண்கள் இறைவிசுவாசம் கொள்ளும் வரை அவர்களுக்கு (உங்கள் பெண்களை) மணமுடித்துக் கொடுக்காதீர்கள். இணைவைப்பவன் உங்களை எவ்வளவு தான் கவர்ந்தாலும் அவனைவிட இறை விசுவாசமுள்ள அடிமை சிறந்தவன்.

(இணைவைக்கக் கூடிய) அவர்கள் நரகத்திற்கு அழைக் கின்றனர். அல்லாஹ் தனது விருப்பப்படி சுவர்க்கத்தின் பாலும் மன்னிப்பின் பாலும் அழைக்கிறான். படிப்பினை பெறுவதற்காக அல்லாஹ் தனது வசனங்களை

மனிதர்களுக்குத் தெளிவுபடுத்துகிறான். ( அல்குர் ஆன் 2:221)

இந்த திருமறை வசனத்திற்கு முன்னோடியாக ஸஹாபாக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை இப்னு அப்பாஸ் (ரழி) பின்வருமாறு அறிவிக்கிறார்கள்.

அபூ உமைய்யாவின் மகள் குறைபா என்ற இணை வைக்கும் பெண்ணை உமர் ( ரழி) மணமுடித்திருந் தார்கள். அவரை உமர் ( ரழி) விவாகரத்து செய்தார்கள். பின்னர் அப்பெண்ணை முஆவியா பின் அபூ சுப்யான் என்பவர் ( இணைவைப்பவராக இருந்த நிலையில்- இஸ்லாத்திற்கு வருவதற்கு முன்) மணந்து கொண்டார்

அபூசுப்யானின் மகள் உம்மு ஹகம் என்ற இணை வைக்கும் பெண்ணை இயாள் பின் கனம் (ரழி) மண முடித்தார்கள். அவரை இயாள் ( ரழி) விவாகரத்துச் செய்தார். பிறகு அப்பெண்ணை அப்துல்லாஹ் பின் உஸ்மான் அஸ்ஸகஃபீ என்பவர் மண முடித்துக் கொண்டார். (நூல்: புகாரி 5287)

يَا أَيُّهَا الَّذِينَ آَمَنُوا إِذَا جَاءَكُمُ الْمُؤْمِنَاتُ مُهَاجِرَاتٍ فَامْتَحِنُوهُنَّ اللَّهُ أَعْلَمُ بِإِيمَانِهِنَّ فَإِنْ عَلِمْتُمُوهُنَّ مُؤْمِنَاتٍ فَلَا تَرْجِعُوهُنَّ إِلَى الْكُفَّارِ لا هُنَّ حِلٌّ لَهُمْ وَلا هُمْ يَحِلُّونَ لَهُنَّ

விசுவாசிகளே! விசுவாசம் கொண்ட பெண்கள் ஹிஜ்ரத் செய்து உங்களிடம் வந்தால் அவர்களைச் சோதித்துப்

பாருங்கள். அவர்களது நம்பிக்கையை அல்லாஹ் நன்கு அறிந்தவன்.

அவர்கள் விசுவாசிகள் என்று நீங்கள் அறிந்தால் அவர்களை ( ஏக இரட்சகனை) மறுப்போரிடம் ( காபிர் களிடம்) திருப்பி அனுப்பிவிடாதீர்கள். இவர்கள் (விசுவாசிகளான பெண்கள்) அவர்களுக்கு ( காபிர்களுக்கு) அனுமதிக்கப்பட்டவர்களல்ல. அவர்கள் ( காபிர்கள்) இவர் களுக்கு ( விசுவாசிகளான பெண்களுக்கு) அனுமதிக் கப்பட்ட வர்களல்ல. (60:10)

இஸ்லாத்தைப் பொறுத்த வரையில் முஸ்லிம்கள் முஸ்லி மல்லாதவர்களை மணமுடிக்கவே முடியாது. இந்நிலையில் திருமணம் முடித்த முஸ்லிமல்லாத ஒரு பெண் இஸ்லாத்தை(ப் பற்றி அறிந்து தெரிந்து) ஏற்றுக் கொண்டு முஸ்லிமானால் அவளது கணவருடன் அவள் சேர்ந்து வாழமுடியாது, வாழக்கூடாது.

அதுபோல் கணவன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு மனைவி இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாதவளாக இருந் தால் அவளுடன் சேர்ந்து வாழ கணவனுக்கு முடியாது.

கணவன் மனைவி ஆகிய இருவரில் ஒருவர் முஸ்லி மாகவும் மற்றவர் காபிராகவும் இருக்கும் சந்தர்ப் பத்திலும் திருமண வாழ்க்கையில் இணைந்திருக்க முடியாது. ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவுடன்

அவர்களுடைய திருமணமும் ரத்தாகி விடும். கணவனும் மனைவியும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால்- முஸ்லிம்களாக மாறினால்- அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ முடியும்.

மனைவி இஸ்லாத்தை ஏற்றிருக்கும்போது கணவன் இஸ்லாத்தை ஏற்காவிட்டால் கணவனிடமிருந்து மனைவி சட்டபூர்வமாகவே பிரிந்து விடுவதால் அவளுடைய இத்தா ஒரு மாதவிடாயிலிருந்து துப்பரவு அடையும் காலம் வரை கணக்கிட வேண்டும். கர்ப்பமாக இருந்தால் பிள்ளையை பெற்றெடுக்கும் வரை ( இத்தா) காத்திருக்க வேண்டும்.

மனைவி இத்தாவை கணக்கிடும் கால எல்லைக்குள் கணவன் இஸ்லாத்தை தழுவினால் ( முஸ்லிமாக மாறினால்) இத்தாவை விட்டு விட்டு அவர்கள் இருவரும் கணவன் மனைவியாக சேர்ந்து வாழலாம்.

மனைவியின் இத்தா முடிந்த பிறகு கணவன் இஸ்லாத்தை தழுவினாலும் சேர்ந்து வாழலாம். கணவன் இஸ்லாத்தை தழுவவில்லை யானால் இத்தாவை முடித்துவிட்டு முஸ்லிமான ஒருவரை மனைவி மணந்து கொள்ளலாம்.

இப்னு அப்பாஸ் ( ரழி) அறிவிக்கிறார்கள்: நபி ( ஸல்) அவர்களையும் முஸ்லிம்களையும் பொறுத்தவரையில்

இணைவைப்பாளர்கள் இருவகையினராக இருந்தனர். ஒருவகை இணைவைப்பாளர்கள் பகைவர்களாக இருந்த னர். அவர்கள் நபி ( ஸல்) அவர்களுடன் போர் புரிவார் கள். நபியவர்களும் அவர்களுடன் போர் புரிவார்கள்.

மற்றொருவகை இணைவைப்பாளர்கள் சமாதான ஒப் பந்தம் செய்து கொண்டார்கள். இவர்கள் நபியவர்களு டன் போர் புரியமாட்டார்கள். நபியவர்களும் அவர் களுடன் போர் புரிய மாட்டார்கள்.

பகைவர்களின் கூட்டத்திலிருந்து ஒரு பெண் ( முஸ்லி மாகி) நாடு துறந்து ( மதீனாவுக்கு) வந்தால் அவளுக்கு மாதவிடாய் ஏற்பட்டு தூய்மையடையும் வரை அவளை யாரும் பெண் பேச அனுமதிக்கப்படவில்லை. அவ்வாறு அவள் ( மாதவிடாய்க்குப் பின்) தூய்மை யடைந்தால் மணமுடித்துக் கொள்ள அவளுக்கு அனுமதி வழங்கப் பட்டது. அத்தகைய பெண் ( முஸ்லிம் ஒரு வரை) மணந்து கொள்வதற்கு முன் அவளுடைய ( முன்னாள்) கணவன் ( முஸ்லிமாகி) நாடு துறந்து வந்ததால் அவள் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டாள்.

பகைவர்களிலுள்ள அடிமையான ஆணோ பெண்ணோ (முஸ்லிமாகி) நாடு துறந்து வந்தால் அவர் சுதந்திரமான வராகவே கருதப்பட்டார். அவருக்கு மற்ற முஹாஜிர்

களுக்குள்ள அனைத்து மரியாதைகளும் அளிக்கப்பட்டன. (நூல்: புகாரி 5289)

## மாதவிடாய் நின்று போன பெண்ணின் இத்தா

தலாக் சொல்லப்பட்ட விவாகரத்து வழங்கப்பட்ட பெண் குறிப்பிட்ட காலம் இத்தா காத்திருக்க வேண்டும். அந்த குறிப்பிட்ட காலம் மேலே கூறியவாறு அவளது மாத விடாய்க்கான காலத்தை வைத்து தீர்மானிக்கப்படுகிறது.

பெண்ணின் உடலமைப்பைப் பொருத்து மாதவிடாய் ஏற்படுவதற்கும் நின்று போவதற்குமான வயது மற்றும் கால எல்லை வித்தியாசப்படும்.

எனவே தலாக் அளிக்கப்பட்டுள்ள பெண்ணுக்கு மாத விடாய் வராது என்ற சந்தேகம் இருக்குமானால் - மாதவிடாய் வருகின்ற காலம் முடிந்து விட்டது இதன் பின் மாதவிடாய் ஏற்பட வாய்ப்பில்லை என்ற சந்தேகம் இருந்தால்-அப் பெண்ணை பொருத்தவரை பிறைக் கணக்குப் படி மூன்றுமாதங்கள் கழியும்வரை ( இத்தா) காத்திருக்க வேண்டும்.

وَاللَّائِي يَئِسْنَ مِنَ الْمَحِيضِ مِنْ نِسَائِكُمْ إِنِ ارْتَبْتُمْ فَعِدَّتُهُنَّ ثَلَاثَةُ أَشْهُرٍ وَاللَّائِي لَمْ يَحِضْنَ

உங்கள் பெண்களில் மாதவிடாய் அற்றுப்போனவர்கள்; விஷயத்தில் நீங்கள் சந்தேகப்பட்டால் அவர்களுக்கும்

மாதவிடாய் ஏற்படாதோருக்கும் உரிய காலக் கெடு மூன்று மாதங்களாகும். (65:4)

## இத்தாவை எப்போது ஆரம்பிப்பது?

கணவன் மனைவியை நீதிபதி அல்லது காழி முன்னால் தகுந்த இரு சாட்சிகளுடன் தலாக் சொன்னவுடன் அன்றி லிருந்து மனைவி இத்தாவை கணக்கிட்டு வரவேண்டும.;

மனைவி கணவனிடமிருந்து பிரிந்து வாழ தலாக் (குல்உ) கேட்டு கணவன் அவளை தலாக் கூறியதன் பின் அந்த நேரத்திலிருந்து அவள் ஒரு மாதவிடாய் காலம் முடியும் வரை இத்தாவை கணக்கிட வேண்டும்.

கணவன் இஸ்லாத்திற்கு வராமல் மனைவி மட்டும் இஸ்லாத்தைத் தழுவினால் இஸ்லாத்திற்கு வந்த அந்த நேரத்திலிருந்து அவள் இத்தாவை கணக்கிட வேண்டும்.

(கணவன் மரணிக்கும்போது மனைவி கர்ப்பிணியாக இருந்தால் அந்நேரத்திலிருந்து குழந்தையை பெற்றெடுக் கும் வரை இத்தாவை கணக்கிட வேண்டும்

கணவன் மரணித்து விட்டார் என்று ஊர்ஜிதமாகியவுடன் அந்த நேரத்திலிருந்து நான்கு மாதங்களும் பத்து நாட்களும் இத்தாவை கணக்கிட வேண்டும்.

கணவன் மரணித்தவுடன் இத்தாவை கணக்கிடுவதற்கு மாற்றமாக கணவனுடைய ஜனாஸாவை ( மையத்தை) அடக்கிய பிறகு அல்லது மையத்தை அடக்கம் செய்து மூன்று நாட்களுக்குப் பிறகு தான் மனைவி இத்தாவை கணக்கிட வேண்டும் என சிலர் சொல்கிறார்கள். செய் கிறார்கள். இது தவறாகும். அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித் தராத காரியமாகும். கட்டாயமாக இந்த நடைமுறையை தவிர்க்க வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் கணவன் வெளிநாடொன்றில் மரணித்து விட்டார் என்று ஊர்ஜிதமான செய்தி வந்தால் அந்த மையித்தை அங்கே அடக்கம் செய்யும் வரை அல்லது ஊருக்கு ( நாட்டுக்கு) கொண்டு வந்து அடக்கம் செய்யும் வரை மனைவி இத்தாவை மேற்கொள்ள விடாமல் தடுக்கிறார்கள்.

அதுபோல் கணவன் ஏதாவது ஒரு விபத்தில் சிக்கி மரணித்து விட்டால் அந்த மையித்தை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி அதன் பிறகு மையத்தை குடும்பத்தாரிடம் ஒப்படைத்து அவர்களும் நல்லடக்கம் செய்த பிறகு தான் மனைவி இத்தாவுக்காக தயாராக வேண்டும் என்று கூறுகிறார்கள்.

வெளிநாட்டிலிருந்து மையத்தை நாட்டுக்கு கொண்டு வருவதற்கும் விபத்தில் சிக்கிய மையத்தை பரிசோத

னைகளுக்கு உட்படுத்தி திரும்பப் பெறுவதற்குமிடையில் பல நாட்கள் பல வாரங்கள் அல்லது பல மாதங்கள் பிடிக்கலாம். அதுவரை அப்பெண்ணை வீணாக காத்தி ருக்கச் செய்து இத்தாவை மேற்கொள்ள விடாமல் -கணக் கிடச் செய்யாமல்- தடுப்பது பெரும் அநீதியாகும். பாவ மாகும். இஸ்லாம் பற்றிய சரியான அறிவும் தெளிவும் இல்லாதவர்களின் செயல்பாடுகளினால் அப்பெண்ணு டைய வாழ்வு மேலும் மேலும் பாதிக்கப்படுகின்றது.

எனவே கணவன் இறந்துவிட்டார் என்று ஊர்ஜிதமாக தெரிந்தவுடன் அன்றைய நாளிலிருந்து மனைவி இத்தாவை கணக்கிட்டு வரவேண்டும்.

இன்னும் சிலர் கணவனின் மரணத்திற்கு இத்தாவை நாற்பது நாட்களுக்கு மாத்திரம் மட்டுப் படுத்திக் கொள்கிறார்கள். இதற்கு எவ்விதமான ஆதாரமும் கிடையாது. கட்டாயமாக நான்கு மாதங்களும் பத்து நாட்களும் தான் இத்தாவை கணக்கிட வேண்டும்.

கணவன் மரணிக்கும் போது மனைவி நோயாளியாக இருந்தாலோ அல்லது இத்தாவை கணக்கிடும் நாட்களில் மனைவி நோயாளியாக மாறினாலோ இத்தாவை கணக்கிடுவதில் எந்தத் தப்புமில்லை. தடையுமில்லை. சில நேரம் நான்கு மாதங்களும் பத்து நாட்களும்

நோயாளியாகவே இருந்தாலும் பிரச்சனையில்லை. இதைப் பற்றி அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை.

## இத்தாவை எங்கிருந்து ஆரம்பிப்பது?

கணவன் மனைவியாக வாழ்ந்த இருவரும் (குடித்தனம் நடத்திய) அந்த வீட்டில் தங்கி இருந்து இத்தாவை ஆரம்பிக்கவேண்டும்.

أَسْكِنُوهُنَّ مِنْ حَيْثُ سَكَنْتُمْ مِنْ وُجْدِكُمْ وَلاَ تُضَارُّوهُنَّ لِتُضَيِّقُوا عَلَيْهِنَّ

உங்கள் வசதிக்கேற்ப அவர்களை நீங்கள் குடியிருக்கும் இடத்தில் குடியமர்த்துங்கள். அவர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி அவர்களுக்கு தீங்கு செய்யாதீர்கள். ( அல் குர்ஆன் 65:6)

கணவனுடைய வீட்டில் (கணவனுடன் வாழ்ந்த வீட்டில்) இத்தாவை மேற்கொள்ள முடியாத சூழல் பயம் அச்சம் பீதி போன்ற ஏதாவது தகுந்த காரணங்கள் இருப்பின் பாதுகாப்பான இடத்தில் முறையான ஒழுங்குகளுடன் இத்தாவை மேற்கொள்ள அப்பெண்ணுக்கு இஸ்லாம் அனுமதி வழங்கியுள்ளது. முடியுமான வரை காழி யாருக்கும் இந்நிலையை எத்திவைப்பதே உசிதமான தாகும்.

**செலவுகளை பொறுப்பேற்றல்** :

இத்தாவுடைய அக்காலத்திலும் மனைவிக்கான உணவு உடை மற்றும் இருப்பிட வசதிக்கான முழு செலவீனங் களையும் கணவன் வழமை போல் மேற்கொள்ள வேண்டும்.

மூன்றாவது தடவையாக கணவன் மனைவியை தலாக் (முத்தலாக்) கூறிவிட்டால் அப்போது கணவன் மனைவிக்காக எந்த செலவுகளையும் மேற்கொள்ள வேண்டிய அவசியமுமில்லை கடமையுமில்லை என்ற செய்தி ஸஹீஹுல் புகாரி உட்பட பல நூற்களில் காணப்படுகின்றன.

மனைவி கர்ப்பிணியாகவோ அல்லது குழந்தைக்கு பாலூட்டுபவளாகவோ இருந்தாலும் இருவருடைய செலவினங்களையும் கணவன் மேற்கொள்ளவேண்டும். கணவனுடைய பொருளாதார வசதிக்கும் சக்திக்கும் உட் பட்டே இச்செலவினங்கள் அமைய வேண்டும்.

وَالْوَالِدَاتُ يُرْضِعْنَ أَوْلَادَهُنَّ حَوْلَيْنِ كَامِلَيْنِ لِمَنْ أَرَادَ أَنْ يُتِمَّ الرَّضَاعَةَ وَعَلَى الْمَوْلُودِ لَهُ رِزْقُهُنَّ وَكِسْوَتُهُنَّ بِالْمَعْرُوفِ لَا تُكَلَّفُ نَفْسٌ إِلَّا وُسْعَهَا لَا تُضَارَّ وَالِدَةٌ بِوَلَدِهَا وَلَا مَوْلُودٌ لَهُ بِوَلَدِهِ وَعَلَى الْوَارِثِ مِثْلُ ذَلِكَ فَإِنْ أَرَادَا فِصَالًا عَنْ تَرَاضٍ مِنْهُمَا وَتَشَاوُرٍ فَلَا جُنَاحَ عَلَيْهِمَا وَإِنْ أَرَدْتُمْ أَنْ تَسْتَرْضِعُوا أَوْلَادَكُمْ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ إِذَا سَلَّمْتُمْ مَا آتَيْتُمْ بِالْمَعْرُوفِ وَاتَّقُوا اللَّهَ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ بِمَا تَعْمَلُونَ بَصِيرٌ

குழந்தைக்கு பாலூட்ட வேண்டும் என்று விரும்புகின்ற கணவனுக்காக (விவாகரத்துச் செய்யப்பட்ட) தாய்மார்கள்

தமது குழந்தைகளுக்கு முழுமையாக இரண்டு ஆண்டு கள் பாலூட்ட வேண்டும். அவர்களுக்கு நல்ல முறையில் உணவும் உடையும் வழங்குவது குழந்தையின் தந்தைக் குரிய கடமை. சக்திக்கு உட்பட்டே தவிர எவரும் சிரமம் தரப்படமாட்டார். தாய் தனது பிள்ளையின் காரணமாக அல்லது தந்தை தனது பிள்ளையின் காரணமாக சிரமம் கொடுக்கப்பட மாட்டார்கள்.

(குழந்தையின் தந்தை இறந்துவிட்டால்) அவரது வாரி சுக்கு இது போன்ற கடமையுண்டு. . இருவரும் ஆலோ சனை செய்து மனம் விரும்பி குழந்தைக்கு பாலூட்டு வதை நிறுத்த முடிவு செய்தால் இருவர் மீதும் எந்தக் குற்றமுமில்லை. உங்கள் குழந்தைகளுக்கு ( செவிலித் தாய் மூலம்) பாலூட்ட வேண்டும் என நீங்கள் விரும்பி னால் ( பெற்ற தாய்க்கு) கொடுக்க வேண்டியதை நல்ல முறையில் கொடுத்து விட்டால் உங்கள் மீது எந்தக் குற்றமுமில்லை. அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நீங்கள் செய்பவைகளை நிச்சயமாக அல்லாஹ் பார்ப் பவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ( அல்குர்ஆன்: 2:233)

## எந்த அடிப்படையில் கணக்கிடுவது?

இத்தாவை கணக்கிடும் போது இஸ்லாமிய முறைப்படி பிறை கணக்குப்படி ( சந்திரக்கணக்கின் அடிப்படையில்)

தான் கணக்கிடப்பட வேண்டும். மாறாக சூரியக் கணக்குப் படி கணக்கிடக் கூடாது.

சுன்னத்தானஇ கடமையான நோன்பு, நோன்புப்பெருநாள், ஹஜ், ஹஜ்ஜுப் பெருநாள் மற்றும் இத்தா போன்ற கடமைகள் சந்திரக் கணக்குப் படிதான் இஸ்லாத்தில் கணிக்கப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய மாதங்களான –

1. முஹர்ரம்

2. ஸபர்

3. ரபீயுல்அவ்வல்

4. ரபீயுல்ஆகிர்

5. ஜமாதுல் அவ்வல்

6. ஜமாதுல்ஆகிர்

7. ரஜப்

8. ஷ ஃபான்

9. ரமலான்

10. ஷவ்வால்

11. துல்கஃதா

12. துல்ஹஜ்.-

ஆகிய பன்னிரண்டு மாதங்களுக்கான கலண்டர் சந்திரக் கணக்கிலான பிறை கணக்குப்படி தான் பின்பற்றப்படு கின்றன.

ரமலான் அல்லது ஹஜ் மாதத்திற்கு மட்டும் பிறை பார்க்கும் விடயத்தில் ஆர்வம் காட்டாமல் எல்லா மாதங்களிலும் பிறை பார்த்து மாதங்களை கணித்து வர வேண்டும். இஸ்லாமிய முறைப் படியுள்ள பன்னிரண்டு மாதங்களையும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். இத்தா உட்பட எல்லா மார்க்கக் காரியங்களுக்கும் இது அவசியமானதாகும். எனவே மாதாமாதம் பிறைபார்த்து வரவேண்டும்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையிலுள்ள மாதங்களுக்கான கலண்டர்கள்' சூரியக் கணக்குப்படிதான் பிற சமூகத்தி னரால் உருவாக்கப்பட்டது. அதன்படி தங்களது மத அனுஷ்டானங்களையும் ஏனைய நிர்வாக அலுவல் களையும் அமைத்துக் கொள்கிறார்கள். நாம் வாழும் நாட்டு சூழலை பொறுத்தவரை நிர்வாக ரீதியாக அதனை செயல் படுத்துவதில் தவறில்லை. ஆனால் அந்த மாதங்களின் படி நாம் இத்தாவை செயல் படுத்தக்

கூடாது. தொழுகைக்கு மாத்திரம் தான் சூரிய நிழல் வெளிச்சத்தின் (நேரப்)படி செயல்பட ஏவப்பட்டுள்ளோம்.

சூரியக் கணக்கிற்கும் சந்திரக் கணக்கிற்கும் ஒரு வருடத்தில் சுமார் 11 நாட்கள் வித்தியாசமுள்ளன. சூரிய கணக்குப்படி கணக்கிட்டால் இத்தாவின் நாட்கள் அதிகமாகிவிடும்.

எனவே இத்தாவை கணக்கிடும் போது அரபு மாதத்தின் எத்தனையாவது மாதத்தில், எத்தனையாவது பிறையில் இருக்கிறோம் என்பதை தெரிந்து செற்படுத்த முனைய வேண்டும்.

## இத்தாவில் குறிப்பிட்ட காலம் காத்திருப்பது ஏன்?

கணவனின் மரணத்திற்காக இத்தாவிலுள்ள பெண்ணும் விவாகரத்து அளிக்கப்பட்ட பெண்ணும் உடனே மறு மணம் முடிக்காமல் குறிப்பிடப்பட்ட காலம் காத்திருக்கு மாறு இஸ்லாம் கட்டளையிடுகிறது. இத்தாவிலுள்ள பெண் உடனே மணம் முடிக்க விடாமல் குறிப்பிட்ட சில நாட்கள் அல்லது சில மாதங்கள் காத்திருக்கச் செய்வ தன் அவசியம் என்ன? என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தலாக் சொல்லப்பட்ட பெண்ணின் இத்தாவும் கணவனின் மரணத்திற்காக உள்ள பெண்ணின் இத்தாவும் இரு நோக்கங்களைக் கொண்டதாகவுள்ளது.

தலாக் சொல்லப்பட்ட பெண்ணை பொறுத்தவரையில் அவள் மீண்டும் கணவனோடு சேர்ந்து வாழ்வதற்கான அத்தனை வாய்ப்புக்களையும் எதிர்பார்த்து வாழ்பவள். தலாக் சொல்லப்பட்டவுடன் மூன்று மாதவிடாய்களி லிருந்து சுத்தமடையும் காலம் முடிவுரும் வரை காத்திருக்கும் காலமெல்லாம் கணவனுடன் இல்லற வாழ்வில் இணைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இத்தாவுடைய இக்காலத்தில் அவள் கணவனது பார்வையிலும் பராமரிப்பிலும் வாழ்ந்து கொண்டிருப் பாள். அந்த காலகட்டத்தில் இருவரது உள்ளங்கள் ஏங்கு வதற்கும் இணங்குவதற்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. அந்த ஏக்கமும் ஊக்கமும் ஊசலாட்டங்களும் வர வேண்டும் உள்ளாந்தமாக உளப்பூர்வமாக தங்களது நிலைமைகளை உணர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த இடை வெளியின் நோக்கமாகும்..

விவாகரத்து பண்ணும் உரிமையை இஸ்லாம் கணவனுக்கு வழங்கியிருந்தாலும் அது குடும்ப வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வாகாமல் இடைக்கால உத்தரவாக அமைத்துக்

கொள்ள ஒரு சந்தர்ப்பமாக மூன்று மாதவிடாய்களி லிருந்து துப்பரவு அடைவதற்கான கால எல்லையை இஸ்லாம் வழங்கியுள்ளது. அக்கால எல்லையில் இடைக்கால உத்தரவை வாபஸ் பெறவோ அல்லது முடிவுக்கு கொண்டு வரவோ அனுமதி வழங்கி யுள்ளது. அது இருவரது விருப்பத்தை பொறுத்தது.

மனைவி மீண்டும் சேர்ந்து வாழ விரும்பினால் கணவனது மனமாற்றத்தை ஏற்படுத்தும் காரியங்களை செய்யலாம். அல்லது நடந்து விட்ட தவறுகளை திருத்திக் கொள்ள வாய்ப்பாக இக்குறிப்பிட்ட காலக் கெடுவை மாற்றிக் கொள்ளலாம்.

முன்பு இருந்ததை விட மிகவும் அலங்காரமாக தன்னை அலங்கரித்துக் கொண்டு ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டு கணவனை சுண்டி இழுக்கும் விதத்தில் இருந்து கொண்டு பரிவை ஏற்படுத்தும் முறையில் மனமாற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொள்ளலாம்.

தலாக் சொல்லப்படு முன் மனைவி எவ்வாறான அலங்காரங்களோடு வாழ்ந்து வந்தாளோ அதனையே தலாக் சொல்லப்பட்ட பின்பு இத்தாவுடைய காலத்திலும் மேற்கொள்ளலாம். தலாக் சொல்லப்படுவதற்கு முன் அலங்காரங்களில் அக்கறை காட்டாமலிருந்தாலும்

இத்தாவுடைய காலப்பகுதியில் அந்த அலங்காரங்கள்; அவசியம் தேவைப்படுகின்றன.இதற்கு முன்பு இருந்த தைவிட அன்பாலும் பண்பாலும் நடத்தைகளாலும் கணவனை கட்டிப்போடலாம்.

சில நேரம் மனைவியினது போக்கில் கணவன் மனம் மாறி இடையில் தலாக்கை நீக்கிக் கொண்டு மீண்டும் சேர்ந்து வாழலாம். தான் விட்ட தவறை எண்ணி கணவன் மனம் வருந்திடலாம். பிரிவினால் ஏற்படும் விபரீதங்களை உணர்ந்து பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை எண்ணி கவலை கொள்ளலாம்.

இருவரது குற்றங்களையும்; உணர்ந்து மனக் கசப்புகளை யும் மறந்து மகிழ்ச்சியாக வாழ வழியாகவும் அது அமையலாம். நன் நடத்தைகளை மீள்பார்வை செய்வதற் கான பாசறையாகவும் இருக்கலாம். அந்நிலையை ஏற்படுத்துவதே இக்குறிப்பிட்ட கால இடைவெளியின் நோக்கம்.

எந்த பெற்றோரும் தங்களது பிள்ளையின் வாழ்வு விவாகரத்தின் மூலம் முடிவுக்கு வருவதை விரும் பாமல் முடிந்தளவு தடுத்துக்கொள்ளவும் அதற்கான அவகாசத்தை பெற்றுக் கொள்ளவும் முயற்சிப்பர். அதனையே இஸ்லாம் இங்கே பெற்றுக் கொடுக்கிறது.

கணவனின் மரணத்திற்காக இத்தாவில் காத்திருக்கும் பெண்ணைப் பொறுத்தவரையில் அவள் முற்றிலுமாக தன்னை மாற்றிக் கொள்ளவேண்டும். அவள் அலங்காரங் களோடு இருந்தால் அது அவளைப்பற்றி தப்பபிப்பிராயங் களை உண்டு பண்ணி விடும். காரணம் அவள் கண வனின் மரணத்திற்கான துக்கம் அனுஷ்டிப்பவளாகவும் இழப்பை எண்ணி துக்கப்படுபவளாகவும் இருக்கிறாள்.

அது மட்டுமல்லாமல் அவளது கருவரையில் கரு உருவாகியிருக்கிறதா? இல்லையா? கர்ப்பத்திற்கான விந்தை சுமந்திருக்கிறாளா? இல்லையா? மரணித்த கணவனுக்கு வாரிசு உண்டா? இல்லையா? கணவன் மரணிக்கும் போது மனைவியுடைய நிலை என்ன? என்பதை நிரூபிக்க வேண்டியவளாகவும் இருக்கிறாள்.

கணவன் மரணித்து ஒருசில நாட்கள் கழிந்து மனைவி மணம் முடித்தால் அவளுக்கு பிறக்கும் குழந்தைக்கு தகப்பன் யார்? என்ற கேள்விக்கு பதில் தேட வேண்டி ஏற்படும்.

சில வேளை குறைமாதத்தில் குழந்தையை பெற்றெ டுத்தால் அது மரணித்த கணவனின் குழந்தையாக இருக்குமோ என புதிதாக மணம் முடித்த கணவன் சந்தேகப்பட்டால் நிலமை என்ன வாகும்? இன்னுமொரு வனின் கருவை சுமந்து பிள்ளையை பெற்றெடுத்து

தன்னை ஏமாற்றி விட்டாள் என கூறினால் எப்படியான விபரீதம் உண்டாகும்?

இங்கே பாதிக்கப்படுவது மனைவி மட்டுமல்ல குழந்தை யும் தான் . அந்தக் குழந்தையின் எதிர்காலம் அழிந்து விடும். அதுமட்டுமல்லாமல் அக்குழந்தை தகப்பன் பெயர் தெரியாத அவல நிலைக்கு உள்ளாவதுடன் வாரிசு சொத்தினைக் கூட பெறமுடியாத அநாதையாகிவிடும்.

இத்தா என்கிற சட்டம் பேணப்படாத சமூகத்தில் இந்த அவல நிலைகளை நாம் காணத்தான் செய்கிறோம். யதார்த்த பூர்வமாக இஸ்லாம் கூறும் இச்சட்டம் சந்தேகங்களை விட்டும் பாதுகாப்பு அளிப்பதுடன் வாழ வைப்பதற்கான வழியையும் உத்தர வாதப்படுத்துகிறது. குறிப்பிடப்பட்ட காலம் காத்திருக்குமாறு இஸ்லாம் கட்டளையிடுவதன் நோக்கம் அறிவுபூர்வமானது அற்புத மானது. இது பெண்களுடைய உரிமைகளை பறிப்பதாக வோ சுதந்திரத்தை நசுக்குவதாகவோ புத்திஜீவிகள் எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

கர்ப்பிணிப் பெண்ணுக்கு குழந்தையைப் பெற்றெடுத்த வுடன் இத்தா முடிவடைகிறது என்ற சட்டத்தினையும் உடலுறவு கொள்ளாத நிலையில் தலாக் சொல்லப்பட்ட பெண்ணுக்கு இத்தா இல்லை என்கிற சட்டத்தினையும்

உணர்ந்து கொண்டால் இந்த உண்மையை மேலும் இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

## இத்தாவின் ஒழுங்குகளும் உருவாகப்பட்ட மூட நம்பிக்கைகளும்

இத்தாவின்போது சில ஒழுங்குகளைப் பேணிவருமாறு இஸ்லாம் கற்றுத் தருகிறது. தலாக் அளிக்கப்பட்ட பெண்ணுக்கும் கணவனின் மரணத்திற்காக காத்திருக்கும் பெண்ணுக்குமான ஒழுங்குகள் அல்லது வரையறைகள் இருவகையாக கூறப்பட்டுள்ளது.
கணவனின் மரணத்திற்காக 4 மாதங்களும் 10 நாட் களுக்கும் இத்தாவில் காத்திருக்கும் பெண் அந்த கால எல்லை முடிவடையும் வரை மணமுடிக்கக்கூடாது.

கணவன் உயிரோடு இருக்கும் போது கடைப்பிடித்து வந்த அத்தனை ஆடை அலங்காரங்கள் மற்றும் மேனி அலங்காரங்களையும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

அவள் தனது கணவனின் இழப்பை எண்ணி வாழ்கிறாள் என்ற நிலையில்தான் இருக்கவேண்டும். சாதாரணமான அலங்காரமற்ற ஆடைகளை அணிந்து கொள்ள வேண் டும். அதற்காக வெள்ளைப் புடவை மட்டும் அணிந்து சோகத்துடன் தலைவிரி கோலமாக குடும்ப உறவு களுடனான தொடர்புகளை துண்டித்துக் கொண்டு தனி

அறையில் ஒதுங்கி இருக்க வேண்டும் என்பதல்ல. அப்படி கட்டளையிடப்படவுமில்லை.

சிலர் இத்தாவுடைய பெண்கள் வெள்ளாடை மட்டும் அணிய வேண்டும் என்ற சடங்கை உருவாக்கியுள்ளதால் இத்தாவுடைய புடவை என்ற பெயரில் ஒரு ஆடை விற்பனைக்கு வந்துள்ளது. இது காலம் வரை சினிமாக்காரர்களின் பெயரால் சல்வார், கமீஸ், புடவை, டீசேட் என்று பல ஆடைகள் விற்பனைக்கு வந்தது போலவே இத்தாவுடைய பெயரிலும் வெள்ளைப் புடவை சந்தைக்கு வந்துள்ளது. இந்த ஆடையைத்தான் கட்டாயம் அணிய வேண்டும் என பெண்கள் நிர்ப்பந்திக்கப்படு கிறார்கள். வியாபாரிகளின் ஒரு யுக்தி இது! இதற்கும் இஸ்லாத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை.

இத்தாவுடைய பெண் வெள்ளை புடவை அணிவது கடமையல்ல என்றும் நகம் வெட்டுதல் அக்குள் முடிகள் மர்மஸ்தான முடிகள் கலைதல் தடுக்கப்பட்டவையல்ல. அவை அனுமதிக்கப்பட்டவை என்றும் இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்களும் இமாம் இப்னு கையும் (ரஹ்) அவர்களும் தெளிவுப்படுத்துகிறார்கள். (நூல்: பத்ஹுல் பாரி 9\ 402. அஸ்ஸாதுல் மஆத் 5\705)

இத்தாவின் போது அலங்காரங்களிலிருந்து இப்பெண் தவிர்ந்து கொள்வதோடு சுத்தமாக ஆரோக்கியமாக

அன்றாட நடவடிக்கைகளில் பங்கு பெறக்கூடியவளாக இருக்க வேண்டும் அவ்வளவுதான்.

இறந்து போன எவருக்காகவும் மூன்று நாட்களுக்கு மேல் நாங்கள் துக்கம் கடைப்பிடிக்கலாகாது எனத் தடை விதிக்கப்பட்டிருந்தோம். ஆனால் கணவனுக்காக ( அவ ரின் மரணத்திற்காக) நான்கு மாதங்களும் பத்து நாட் களும் தவிர.

மேலும் ( இத்தாவின்போது) நாங்கள் கண்களுக்கு சுர்மா இட்டு கொள்ளவோ, நறுமணம் பூசிக் கொள்ளவோ சாயமிடப்பட்ட ஆடையை அணியவோ கூடாது என தடை விதிக்கப்பட்டோம். ஆனால் நெய்வதற்கு முன் நூலில் சாயமிடப்பட்டு தயாரிக்கப்பட்ட ஆடையைத் தவிர ( அதனை அணிந்து கொள்ள அனுமதி வழங் கப்பட்டது).

மேலும் எங்களில் ஒருவர் மாதவிடாயிலிருந்து குளித் துக் தூய்மையடையும்போது ழ∴பர் எனும் இடத்தில் கிடைக்கும் கோஷ்டக் கட்டைத் துண்டால் நறுமணம் புகையிட்டுக் கொள்ள எங்களுக்கு அனுமதிக்கப்பட்டது. மேலும் நாங்கள் ஜனாஸாக்களை பின் தொடர்ந்து செல்ல கூடாதென்றும் தடை விதிக்கப்பட்டிருந்தோம் . அறிவிப்பவர்: உம்மு அதிய்யா (ரழி) (நூல்: புகாரி)

கணவனையிழந்த பெண் ( இத்தாவின்போது) செந்நிற சாயமிடப் பட்ட ஆடை காவிதோய்ந்த ஆடை ஆபரணம் ஆகியவற்றை அணிய வேண்டாம். சாயம் பூசிக் கொள்ளவோ சுர்மா இட்டுக் கொள்ளவோ வேண்டாம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: உம்முஸலமா (ரழி) (நூல்: அஹ்;மத் நஸாஈ 3534-35)

மேலே கூறப்பட்ட எந்த ஒழுங்குகளையும் தலாக் சொல்லப்பட்ட பெண்ணுக்கு விதிக்கப்படவில்லை. அவள் கணவனுடன் சேர்ந்து வாழ்வதற்கான வழிகளை ஏற் படுத்துவற்கான நிலையிலே இருப்பதனால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு சொல்லப்படவில் லை. அன்றாட நடைமுறையில் கணவனோடு - தலாக் சொல்லப்பட முன் எப்படி இருந்தாலோ அப்படியே தலாக்குடைய காலத்திலும் இருந்துகொள்ளலாம்.

## மூட நம்பிக்கைகள்:

இத்தாவின் பெயரால் தவறான செயற்பாடுகள் சில சமூகத்தில் ஒருசிலரிடம் பின்வருமாறு காணமுடிகிறது.

- இத்தாவிலுள்ள பெண் அண்டை வீட்டுக்கார பெண்களோடு பேசமுடியாது.
- அவர்கள் நோய்வாய்ப்பட்டால் போய்ப் பார்க்க முடியாது.

- குடும்பத்தில், சொந்தக்காரர்களில் யாராவது சுக யீனமாக இருந்தால் அவர்களைப்பார்த்து நோய் விசாரிக்க முடியாது.

- சுகதுக்கங்களை விசாரித்து ஆறுதல் வார்த்தைகள் சொல்ல முடியாது.

- நல்ல காரியங்களில் பங்குகொள்ள முன்வர முடியாது.

- குடும்பத்தில் உறவுக்கார ( மஹ்ரமிய்யத்தான) ஒருவர் மரணித்தாலும் அல்லது பக்கத்து வீட்டாரோடு அன்போடு பழகிய பெண் ( தோழி) மரணித்தாலும் மையத்தை பார்க்கவோ அந்த மையத்து வீட்டுக்கு போகவோ முடியாது.

- நோய்வாய்ப்பட்டால் மருத்துவ மனைக்கு போக முடியாது. (முடிந்தால் பெண் மருத்துவர்களைத் தான் தேடிப்பிடித்து வீட்டுக்கு அழைத்து வருவார்கள்.)

இதனோடு இன்னும் சில கொடுமைகளையும் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

- இத்தாவிலுள்ள பெண்ணுக்கு வெளிச்சம் படாமல் இருக்க கூரை மற்றும் ஜன்னல்களை மறைத்தல்.

- கணவன் மரணித்த இடத்தில் விளக்கேற்றி இத்தாவை ஆரம்பித்தல்.
- இரவு பன்னிரெண்டு மணிக்கு நடுநிசி வேளையில் மஞ்சல் நீரால் குளிப்பாட்டி வெள்ளை புடவையை அணிவித்து யாஸீன் மற்றும் துஆ ஓதி இத்தாவை ஆரம்பித்தல்.
- கர்ப்பிணி பெண்ணை பார்க்கவிடாமல் தடுத்தல். (பார்த்தால் கரு கலைந்து விடும் என்ற பயம்)
- புதிதாக மணம்முடித்த தம்பதிகளை பார்க்க விடாமல் -அவர்கள் முன் வரவிடாமல்- தடுத்தல்.
- நாளாந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் செய்திகளைப் பார்க்க விடாமல் -உலக விவகாரங்களை நாட்டு நடப்புகளை அறிய விடாமல்- தடுத்தல்.
- கண்ணாடி பார்ப்பதை தலை வாருவதை தடுத்தல். தலைக்கு எண்ணெய் இடுவதை தடுத்தல்.
- தங்கியிருக்கும் அறையை விட்டும் வெளியில் வர விடாமல் தடுத்தல்.
- அந்த இடத்தை தென்னை மரகீற்றுக்களால் நாலா புறமும் மறைத்தல்.

- உடன் பிறந்த சகோதரன், அவர்களது பிள்ளைகள் மற்றும் மருமகனையும் பார்க்க விடாமல் தடுத்தல், பெற்ற தகப்பனையும் அணுக விடாமல் தடுத்தல்.
- இத்தா முடிவுரும்போது மஞ்சள் நீரால் குளிப்பாட்டி ஆராத்தி எடுத்தல். அப்போது பள்ளி வாசல் கதீபை அழைத்து யாஸீன் மற்றும் துஆ ஓதுதல்.

பிற மதத்தவர்களின் சில சடங்கு சம்பிரதாயங்களை உள்வாங்கி இதுபோன்ற சடங்குகளை உருவாக்கி இத்தா முடிவடையும் வரை மேற்கொள்கிறார்கள். பெருமளவில் இந்த மூடப் பழக்கங்கள் இல்லாமல் போனாலும் ஒரு சில இடங்களில் ஒருசில காரியங்கள் காணப்படுகின் றன. இவை நிச்சாமாக கண்டிக்கப் பட வேண்டும்.

இந்தக் கட்டுப்பாடுகளுக்கும் சடங்கு சம்பிரதாயங்களுக் கும் இஸ்லாத்திற்குமிடையில் ஏதாவது தொடர்பு இருக் கிறதா என்றால் எந்தத் தொடர்புமில்லை. இவர்களாகவே விதியாக்கிக் கொண்டு பெண் சமூகத்தை நசுக்கி விடு கிறார்கள்.

மார்க்கத்தின் பெயரால் ஒரு விடயத்தை விதியாக்கு வதாக இருந்தால் கட்டுப்பாட்டை கொண்டுவருவதாக இருந்தால் அதற்கு குர் ஆனிலிருந்தும் ஹதீஸிலிருந்தும் ஆதாரத்தை கொண்டு வர வேண்டும். ஆதாரம் கொண்டு வரப் படவில்லையென்றால் அதனை மார்க்கமாக

எடுத்துக் கொள்ள முடியாது, எடுத்துக் கொள்ளக் கூடாது.

இத்தா என்ற ஒரு கடமையை அல்லாஹ்வும், அவனது தூதரும் தான் விதியாக்கினார்கள். இத்தாவை கணக் கிடும் பெண் இப்படித் தான் இருக்க வேண்டும் என்ற வரையறைகளையும் அல்லாஹ்வும் அவனது தூதரும் தான் கூறமுடியும். அல்லாஹ்வும் அவனது தூதரும் கூறாத விதிகளை கட்டுப்பாடுகளை எந்த மனிதனும் கூற முடியாது. அதற்குரிய உரிமை அவனுக்கில்லை.

இப்படியான ஒரு விதி அல்லது கட்டுப்பாடு இத்தாவை கணக்கிடும் பெண்ணுக்கு தேவை என்று இருக்குமாக இருந்தால் நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது தூதரும் இந்த சமூகத்திற்கு காட்டித் தந்திருப்பார்கள்.

இத்தாவை கணக்கிடும் பெண்ணுடைய செயல்கள் நட வடிக்கைகள் எப்படி? எங்கே? அமைய வேண்டும் என்பதை மிகத் தெளிவாக கூறிய அல்லாஹ்வும் அவனது தூதரும் சமூகம் கண்டுபிடித்திருக்கும் இந்த கட்டுப்பாடு களை காட்டித் தரவில்லை என்றால் அது தேவையற்றது என்று தான் அர்த்தம்.

இத்தாவிலுள்ள பெண்களின் நலன் கருதிதான் இந்த கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறோம். இதனால் நன்மை

ஏற்படுமே தவிர தீங்கு வரப்போவதில்லை என்று யாரும் நியாயம் கற்பிக்க  முடியாது.

நன்மை தீமையைப் பற்றி முடிவு செய்யும் அதிகாரம் மனித சமூகத்திற்கு வழங்கப்படவில்லை. இத்தாவைக் கணக்கிடும் பெண்ணுக்கு எது நல்லது? எது கெட்டது? என்பதை அல்லாஹ்வும் அவனது தூதரும் வரையருத்து கூறியபின் நாமாக புதிய வரை யரைககளை உண்டாக்க கூடாது.

ஆகவே தேவையற்ற கட்டுப்பாடுகளை விதித்து சங்கடங்களை கொடுத்து அவர்கள் இருக்கும் வீட்டை ஒரு சிறைக் கூடமாக ஆக்கக் கூடாது.

### பார்க்கக் கூடாத ஆண்கள் உண்டா?

இத்தாவிலுள்ள இப்பெண்ணை அறையிலிருந்து வெளி யில் அழைத்து வர நேரிட்டால் முழுமையாக மூடி மறைத்து தலையை தாழ்த்தி பூமியை பார்க்கச் செய்யும் வண்ணம் அழைத்து வருவார்கள். ( கிரிமினல் குற்ற வாளியை பொலிஸார் நீதிமன்றத்திற்கு அழைத்து வருவதுபோல் அக்காட்சி இருக்கும்.)

இத்தாவுடைய பெண் எந்த ஆண்மகனையும் பார்க்கக் கூடாது. பார்த்தால் இத்தா கலங்கப்பட்டுவிடும். இத்தா முறிந்து விடும். அதுமட்டுமின்றி ஒரு ஆண்மகனுடன்

பேசினால் அல்லது அவனை பார்த்தால் அல்லது அவன் அவளை பார்த்தால் மக்கள் தவறாக விளங்கி வீண் கதைகளை கட்டி விடுவார்கள். ஆகவேதான் அவளை அடைத்து வைக்கிறோம் என்று நியாயம் கூறுகிறார்கள். இவர்கள் கூறும் சடங்கும் சம்பிரதாயங்களும் காரணங் களும் நியாயம் போல் தோன்றினாலும் உண்மையில் இது நியாயமேயல்ல. அநியாயம்.

ஒரு அந்நிய ஆண்மகனை ஒரு அந்நிய பெண்ணை பருவ வயது அடைந்த காலத்திலிருந்து தனிமையில் பார்க்கக் கூடாது பேசக்கூடாது அந்த இடத்தில் இருக்கக் கூடாது. பேச வேண்டிய தேவை ஏற்பட்டால் மஹ்ர மியத்தான ( திருமணம் முடிப்பதற்கு தடுக்கப்பட்டுள்ள முஸ்லிமான) ஒருவரின் முன்னிலையில் பேச வேண்டும். அவசரதேவை கருதி பேசவேண்டி வந்தாலும் ஒழுக்க வரம்புகளை பேணி நடந்து கொள்ளவேண்டும் என்பதுதான் இஸ்லாமியச் சட்டமே தவிர மாப்பிள்ளை மரணித்த பின் மட்டும் அப்பெண் அந்நிய ஆணை பார்க்கக் கூடாது என்ற சட்டம் கிடையாது.

ஒழுக்கமுள்ள கட்டுப்பாடுள்ள சிறந்தவொரு ( வாழ்வை) சமூகத்தை கட்டியெழுப்ப ஆண், பெண் இருசாராருக்கும் இஸ்லாம் விதித்த சிறப்பான சட்டம் இது. இதனை கேலிக் கூத்தாக்கும் நிகழ்ச்சியாகவே இத்தாவுடைய பெண்ணின் விஷயத்தில் ஆக்கியிருக்கிறார்கள்.

இந்தப் பெண், மாப்பிள்ளை உயிரோடு இருக்கும்போது அந்நிய ஆண்களை பார்க்காது பேசாது ஒழுக்கமாக இருந்தது போல தான் இத்தாவுடைய நாட்களை கணக்கிட்டு வரும் நாட்களிலும் நடக்க வேண்டும். மாப் பிள்ளை உயிரோடு இருக்கும்போது அவளது வீட்டுக்கு அந்நிய ஆண் நுழைய முடியாதளவு இருந்தது போல் தான் இத்தாவுடைய காலத்திலும் இருக்க வேண்டும். இந்த ஒழுங்கு முறையை எப்போதும் அவள் கடை பிடிக்க வேண்டும். . இஸ்லாம் கூறும் இச்சட்டத்தை சரிவர படித்து தெரிந்து வைத்துக் கொள்ளாததனால் தான் தவறாக இச்செயற்பாட்டை உருவாக்கியிருக் கிறார்கள்.

இத்தாவின்போது ஐந்து வயது சிறுவனையும் பருவ வயதை அடையாத சிறுவர்களையும், தன்னுடைய சகோதர, சகோதரி போன்ற உறவு முறையில் வந்த பிள்ளைகளையும் பார்க்க விடாமல் பேச விடாமல் தடுப்பது சிறுவர்களை உளரீதியாக பாதிப்படையச் செய்யும் காரியமாகும். அத்தோடு அப்பெண்ணும் மனோரீதியில் தாக்கத்திற்குள்ளாகும் செயலாகும்.

கணவனை இழந்த சோகத்தில் இருக்கும்போது சொந்த சகோதரர்களையும் பிள்ளைகளையும் உறவுமுறைகளை யும் பார்க்க முடியாமல் தனித்து விடப்பட்டுள்ளோமே என்ற துக்கத்திற்கும் மனச்சோர்வுக்கும் ஆளாகுவாள்.

இது அவளுடைய வாழ்க்கையில் - உடல் உளரீதியாக- பெரும் தாக்கத்தை உண்டு பண்ணிவிடும்.

ஒரு பெண் இஸ்லாமிய ஒழுக்க விதிகளை, வரம்புகளை எப்படி பேணி நடந்துவந்தாளோ அதே ஒழுக்க விதிகளை கணவனது மரணத்திற்குப் பின்பும் (இத்தாவுடைய காலத் திலும்) பேணி நடந்து கொள்ள வேண்டும். இந்த ஒரு அம்சத்தை புரிந்து கொண்டால் தேவையற்ற கட்டுப்பாடு கள் தொலைந்து போய்விடும்.

## *இத்தாவின் போது திருமணம் பேசலாமா?*

இன்னுமொரு முக்கியமான சட்டம் உண்டு. இத்தாவில் காத்திருக்கும் அப்பெண்ணுக்கு, இத்தா முடியும் முன் திருமணம் பேசக் கூடாது திருமணம் நிச்சயப்படுத்தக் கூடாது. சிலேடையாக எடுத்துக் கூறலாம். வேண்டு மானால் மறுமணத்திற்கான அவசியத் தேவை பற்றி உணர்த்தலாம்.

وَلا جُنَاحَ عَلَيْكُمْ فِيمَا عَرَّضْتُمْ بِهِ مِنْ خِطْبَةِ النِّسَاءِ أَوْ أَكْنَنْتُمْ فِي أَنْفُسِكُمْ عَلِمَ اللَّهُ أَنَّكُمْ سَتَذْكُرُونَهُنَّ وَلَكِنْ لا تُوَاعِدُوهُنَّ سِرًّا إِلا أَنْ تَقُولُوا قَوْلاً مَعْرُوفًا وَلا تَعْزِمُوا عُقْدَةَ النِّكَاحِ حَتَّى يَبْلُغَ الْكِتَابُ أَجَلَهُ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ يَعْلَمُ مَا فِي أَنْفُسِكُمْ فَاحْذَرُوهُ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ غَفُورٌ حَلِيمٌ

(இவ்வாறு இத்தாவில் காத்திருக்கும்;) பெண்ணுடன் திருமணம் செய்யக் கருதி (அது பற்றிக்) குறிப்பாக அறி விப்பதிலோ, அல்லது மனதில் மறைவாக வைத்தி

ருப்பதிலோ உங்கள் மீது குற்றமில்லை. நீங்கள் அவர் களைப்பற்றி எண்ணுகிறீர்கள் என்பதை அல்லாஹ்; அறிவான்.

ஆனால் இரகசியமாக அவர்களிடம் ( திருமணம் பற்றி) வாக்குறுதி செய்து கொள்ளாதீர்கள்; ஆனால் இது பற்றி வழக்கத்திற்கு ஒத்த ( மார்க்கத்திற்கு உகந்த) சொல்லை நீங்கள் சொல்லலாம்;.

இன்னும் ( இத்தாவின்) கெடு முடியும் வரை திருமண பந்தத்தைப் பற்றித் தீர்மானித்து விடாதீர்கள். அல்லாஹ் உங்கள் உள்ளங்களிலுள்ளதை நிச்சயமாக அறிகின்றான் என்பதை நீங்கள் அறிந்து அவனுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாக வும், பொறுமையாளனாகவும் இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (2:235)

### தேவைப்படின் வெளியில் செல்லலாமா?

இத்தாவுடைய காலத்திலுள்ள பெண்ணுக்கு மருத்துவ தேவை உட்பட அத்தியவசிய தேவைகள் ஏற்பட்டால் வெளியில் சென்று இரவு நேரத்திற்கு முன்பாக வந்து விட வேண்டும் என்பதற்கு பின் வரும் ஹதீஸ் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

என் தாயின் சகோதரி தலாக் சொல்லப்பட்ட பெண்ணா வாள். ( இத்தாவின்போது) தமது பேரீச்ச மரத்தின் கனிகளைப் பறிப்பதற்காக ( வெளியில் செல்ல) விரும் பினாள். ( அப்போது) நீ வெளியே செல்லக் கூடாது என ஒருவர் கண்டித்தார்.

ஆகவே என் தாயின் சகோதரி நபி (ஸல்) அவர்களிடம் வந்து இது குறித்து வினவினார். அப்போது நபியவர்கள் ஆம்! நீ சென்று உமது பேரீச்சம் மரத்தின் கனிகளைப் பறித்துக் கொள். ஏனெனில் ( அதில் கிடைக்கும் வரு மானத்தில்) நீ தர்மம் செய்யக் கூடும் அல்லது ஏதேனும் நல்லறம் புரியக் கூடும் என்றார்கள். ( அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்(ரழி), நூல்: முஸ்லிம் 2727)

நபிகளாரின் காலத்தின் பின் இமாம்களது காலத்திலும் இந்த அனுமதி பேணப்பட்டுள்ளது என்பதற்கு இந்த ஹதீஸின் விளக்கவுரையில் தெளிவுப்படுத்தப்பட் டுள்ளது. இமாம்களான இமாம் மாலிக் ( ரஹ்) இமாம் ஷாபி ( ரஹ்) இமாம் அஹ்மத் ( ரஹ்) இமாம் லைஸ் (ரஹ்) ஆகியோர் இத்தாவிலுள்ள பெண் பகல் பொழுதில் வெளியில் செல்லலாம் என இந்த ஹதீஸூக்கு விளக்கம் தந்துள்ளதை காண முடிகிறது. (நூல்:ஷரஹ் முஸ்லிம்)

இத்தாவிலுள்ள பெண் தன்னுடைய தேவை கருதி பேரீச்ச மர தோட்டத்திற்கு போய் வரமுடியும் என

நபியவர்கள் அனுமதி வழங்கியிருக்கும் போது எமது சமூகம் ஏன் வீணான விடயங்களை புகுத்தி கட்டுப் படுத்த வேண்டும்.

பெண்கள் வீடுகளில், பாதுகாப்பான சூழலில் தொழிலில் ஈடு படக் கூடியவர்களாக இருந்தால், உதாரணமாக தையல் தொழில், கைப்பணித் தொழில் போன்றவற்றில் ஈடுப்படக் கூடியவர்களாக இருந்தால் இத்தாவுடைய காலத்திலும் அந்த தொழிலை முறையாக தாராளமாக செய்யலாம்.

நபிகளாரிடம் சென்று ஸஹாபா பெண்மணிகள் மார்க்க விளக்கம் கேட்டு உரிய ஆதாரத்தை பெற்று பின்பற்றி னார்கள். எனவே மார்க்க விடயத்தில் எமது பெண்களும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மார்க்க விடயங் களில் கவனம் செலுத்தாத வரை மூட நம்பிக்கைகளை ஒழிக்க முடியாது.

எனவே இத்தா உட்பட எல்லா விடயங்களிலும் எல்லா இபாதத்களிலும் தூய்மையான குர்ஆனையும் தெளி வான நபிகளாரின் சுன்னாவையும் பின்பற்றி வாழ் வோமாக. ஆமீன்.